ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, 1—12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஞு தை-மீ 24-உ (5—2—1933) | மலர் 41.



# லெனினும், மதமும்.



இது ரஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரசு ஆட்சியை வேருடன் வீழ்த்தி ஏழை பணக்காரத்தன்மையை அழித்து, தோட்டி முதல் தொண்டமான்வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் அரசு புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடமைக்கொள்கை வீரரூகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாங்கிப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் ஏன் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை ஏன் அவர்கள் நாஸ்திகப்பிரசாரம்செய்பவர்களாகக்காணப்படுகிறுர்கள் என்பதும், சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் ஏன் குற்றம் சொல்லுகிறுர்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்ட்டாயை ரஷியர்கள் ஏன் வெறுத்தார்கள் என்பதும் நன்ருய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்திஞல் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெருமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்ருய் விளங்கும். ஆகவே இப் புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணு 0—6—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணு 0—4—0
விலையுடன் ஒரு அணு ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

# இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இஃது மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பரான்ஜ்பே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும்நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவ்தவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணா ... ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0
மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதீக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

### ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0

நாஸ்திகன்
C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

### "SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Price annas. 0-2-0

### 1933ஹூ காலண்டர் இனம்!

மதன காமேஸ்வரி லேகியம்.
பெயர்பெற்ற மலபார் கஞ்சா தாது புஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் செலவு அணா 8. கேட்லாக் இனம்.
சித்தஔஷதவைத்தியசாலை, A. போஸ்டு; புல்லச்சேரி,
தென் மலையாளம்.

### 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை
ஆசிரியர்- வி. நைனன்.
வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.


குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம்

கும்பகோண மகாமகம்.

# (Scientific Method and Ignorant Beliefs.)

# மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

## "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

### "ஆஸ்திக விஞ்ஞான சாகரத்திற்கு" விடை.

(15)

முன் 14 அத்தியாயங்களில், நமது சிறு நூலாகிய "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூலின் மேல் எழும் சில பிரச்சினைகளைக் குறித்து நமக்குத் தெரிந்தவரை எழுதி வந்தோம். அவைகளுக்கு அனுபந்தமாகவும், "ஆஸ்திக நாஸ்திக வாதத்தைக் குறித்தும்" இரண்டொரு வியாசமும் எழுதியுள்ளோம். பல நிருபர்கள், பல பிரச்சினைகளை, இவ்வியாசங்களின் சம்பந்தமாகக் கிளப்பினார்கள். இவைகளுக்கெல்லாம், நம்மால்கூடிய வரை, விடை பகர்ந்துள்ளோம். இவ்விடைகளின் முக்கிய கருத்து என்னவெனில், நமது அபிப்பிராயத்தை, பாமர மக்களும், மற்றும் கற்றறிந்தோரும் ஆலோசனை இன்றி, சம்மதிக்கவேண்டிய அல்லவே அல்ல. நாம் விசாரித்தமாதிரியாக நமது தமிழ் நாட்டு மக்கள் மேலெழுதி வந்த மெஞ்ஞான முறையை ஏற்றுக்கொண்டு அம்முறையைக் கொண்டு நமது நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் விசாரித்தறிய வேண்டுமென்பதே நமது பூரண கோரிக்கையாகும். ஆதலின் "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூலில் கூறியுள்ள முறைப்படி கடவுள், ஆன்மா, மோட்சம், நரகம், மறு ஜனனம், நிர்வாணம், சமாதி, சீவ முக்தி முதலிய கோட்பாடுகளை (Doctrines) ஆராய முயற்சிப்போருக்கு இக்கோட்பாடுகள் யாவும் வெறுஞ் சொற்களென்றே ஏற்படும். ஒரு திருஷ்டாந்தத்தை எடுத்துக் கொள்ளுவோம். "ஐந்து கண்ணன்" என்ற பதம் ஒன்றுண்டு. அதுவோர் புராதனச் சொல். அதனைக்கேட்ட மாத்திரத்தில் சிறு குழந்தை நடுங்குகின்றன. கண்களை மூடிக்கொள்கின்றன. பயந்து தங்கள் அழுகையை நிறுத்தி விடுகின்றன. இச்சொல்லை, நமது தாய் தந்தையர் நமது குழந்தைகளுக்குச் சொல்லி பயப்பட வைக்காவிட்டால் "ஐந்து கண்ணன்" குழந்தைகளுக்குத் தோன்றப்போவதில்லை. அக்குழந்தைகளும், பயப்படப்போவதுமில்லை. "ஐந்து கண்ணன்" என்ற சொல் வெறும் வார்த்தை என்று தெரிந்து கொண்ட மாத்திரத்தில, குழந்தை உலகிற்கு யாதொரு கெடுதியும் நேரப்போவதில்லை. ஒரு நன்மையும் பெறப்போவதில்லை. "ஐந்து கண்ணனை" நாம் யாரும் பார்த்ததில்லை. பார்க்கப் போவதுமில்லை. ஆனால் பாரதமாதிரி நமது தாய், தகப்பன், நமது சிறுவர்களுக்கு அவ்வார்த்தையைக் காட்டி, பயமுறுத்துகிறார்கள். இச்சொல் வெறுஞ்சொல்லென்று நமக்குத் தெரிந்திருந்தும், சிறுவர் சிறுமிகள் அதனைக் கேட்ட மாத்திரத்தில ஓடி ஒழிந்து கொள்ளுகின்றார்கள். ஏன்? நமது பழக்க வழக்கமே இப்பொய்க்குக் காரணம். அதுபோலவே, "கடவுள்" "ஆன்மா" முதலிய சொற்களை நாஸ்திகர், வெறுஞ்சொல்லென்று கூறுகின்றனர் ஆனால் ஆஸ்திகர் அந்த சொற்கள் குறிக்கும் பொருள்களைத் தாங்கள் பாராவிடினும், பார்க்கப்போவதில்லை என்றாயினும் அச்சொற்களை பெரிய குழந்தைகளாகிய பாமர ஜனங்களுக்குக் காட்டி அவர்களை நடுங்கச்செய்கின்றனர். வணங்கச் செய்கின்றனர். தொழச்செய்கின்றனர். உயிரை விடவும் செய்கின்றனர். ஆதலின் விஞ்ஞான முறைப்படி "ஐந்து கண்ணனுக்கும்" "கடவுளுக்கும்" வித்தியாசமொன்றுமில்லை என ஏற்பட்டது. இம்மாதிரியாகவே, விஞ்ஞான முறையைக் கொண்டு பிரபஞ்சத்தை விசாரிக்குமளவில் கடவுளுக்கு பிரபஞ்சத்தில் தங்க இடமில்லை என்றும், அப்பொருளுக்கு வேலை இன்னதென விளங்கவில்லை என்றும் ஏற்பட்டது. இத்தியாதி ஞாயங்களைத்தான் நமது நூலில் குறித்துள்ளோம். விஞ்ஞான முறைகளாகிய பார்த்தல், பரிட்சித்தல் (Seeing and Verifying) என்பனும் முறைகளை மதக்கோட்பாடுகளுக்குப் பிரயோகிப்போமேயாகில், "கடவுளும் பிரபஞ்சமும்" கூறும் தீர்மானத்திற்கு அறிஞர் வாராமல் இரார்கள். நமது நியாயம் இவ்வாறிருக்க, இந்நியாயத்தைக் கண்டிக்க எழுந்தவர்களில் 'ஆஸ்திக விஞ்ஞான சாகரம், அல்லது "கடவுளும பிரபஞ்சமும்" என்னும துர்வாதத்திற்கு மறுப்பு" என மகுடமிட்டு எழுதிய நூலாசிரியர் ஒருவர். இவ்வறிஞர் நமக்குத் தாம் இயற்றிய நூலொன்றை அனுப்பியுள்ளார். இவர் நமது தோழராக ஒருகாலத்தில் தொழிலாளர்பால் உழைத்து வந்தவர் போல் தோன்றுகின்றது. நமது தோழரே நம்மைக் கண்டிக்கப்புகுந்தது விசேடமே. இவர் நமது கடவுளும் பிரபஞ்சமும் என்ற நூலைக்கவனித்துப் படித்துவந்ததாகத்தெரிகிறது. இவர் அத்தியாயம், அத்தியாயமாக, நமது நூலைக் கண்டித்து வருகின்றார். இவர், மேல் நாட்டு மெஞ்ஞானிகளுடைய நூல்களைக் கற்றவராகவும் தெரிகிறது. தமக்கு, மேல் நாட்டு தத்துவ ஞானிகளில் சிலரை ஆதாரமாகவும் தமது புத்தகத்தில் குறிப்பிடுகின்றார். இவரைப் போன்ற தர்க்க வாதிகளுக்கு நமது விடையைத் தெரிவிக்கும் கடமை நம்மைப் பொறுத்தது ஆதலின். மனமகிழ்ச்சியுடன் இவரது மறுப்பை கவனிப்போம்.

முகவுரையாக, நமது ஆசிரியருக்கு ஒன்று தெரிவித்துக்கொள்கின்றோம். அதாவது, தமது மறுப்பை, ஆஸ்திக விஞ்ஞான சாகரம் என்று அழைத்துக் கொள்வதில் யாருக்கும் ஆட்சேபனை ஒன்றுமிலலை. ஆஸ்திகததை "விஞ்ஞான" மென்றாலும் பாதகமொன்றுமில்லை. ஆனால், "கடவுளும், பிரபஞ்சமும்" என்ற நூலை, "துர்வாதம்" என்று நமது ஆக்கியோன், (Our author,) பெயரிட்டது தான், ஆங்கிலத்தில் (Out of taste) அதாவது ருசி அற்ற விஷயமாகும். இவ்வளவு கற்ற ஆக்கியோன், (Learned author) இவ்விதமாக அற்ப வார்த்தையை உபயோகித்தது தான், கற்றோர் மனதை புண்படுத்தாமல் இராது. இது நிற்க, நமது ஆசிரியர் நூலின் முக்கிய கருத்தை சற்று கவனிப்போம்.

இந்நூலின், நூன்முகத்தில், நமது ஆக்கியோன் கருத்து விளங்குகிறது. சுயமரியாதை இயக்கம் நாஸ்திகத்தில் இயங்கியதாகவும், மேல் நாட்டு ஜட தத்துவ கலைகளை அறிந்த சிலர், அவ்வியக்கத்தில் சேர்ந்து நாஸ்திகத்தைப் பாமர மக்களுக்கு பரப்புவதாகவும், ஆத்ம தத்துவத்தை, தூறை கூறுவதாகவும், வேதாந்த சிகரங்களை தகர்க்க ஆரம்பித்தோமென்றும், மகாத்மாக்கள் தோன்றிய நாட்டில், நாஸ்திகததை புகட்ட வந்தோமென்றும், தற்கால கல்வி முறையுமே தேசம் அடிமைத்தனத்தில் மூழ்கிக் கிடப்பதற்குக் காரணமென்றும், அத்துடன் நாஸ்திகம் நுழைந்தால், இந்த நாடு என்னுகுமென்றும் எடுத்துக் காட்டி; இந்நாஸ்திகம் பரவ விடாது, வேருடன் களைய வேண்டியது அறிஞர் கடமையாகுமென்று வரைந்துள்ளார். மேல் நாட்டு ஜட தத்துவ அபிப்பிராய பிசகையும், கீழ் நாட்டு அறிஞர்களின் மேன்மையும் விளக்க தனது நூலை ஆஸ்திக விஞ்ஞான சாகரமென்று பெயரிட்டுள்ளாராம்!

நமது நாட்டை, நமது ஆசிரியர், புகழ்ந்து பேசுவதில் நமக்கு ஆட்சேபனை இல்லை. ஒவ்வொரு நாட்டாரும், அவரவர் நாட்டைப் புகழ்வதால் உலகில் குரோதமேற்படுமே யொழிய வேறில்லை. மனித குலம் யாராயிருப்பினும், எந்த ஜாதியாயினும் வொன்றே யாதலால், அந்த குலத்திலுள்ள வெவ்வேறு நாட்டார் ஒருவருக்கொருவர் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பது அசம்பாவமாகும்.

சைனாகாரர் மற்ற உலகத்தவரை காட்டு மிராண்டி என்றும், (Barbarians) தாங்கள் தேவகுல மென்றும், (Celestials) சொல்லி வந்த பயனை இன்றைக்கு தங்கள் அடிமைத் தனத்தில் பார்க்கலாம். நமது ஆர்ய நாட்டின் பெருமை, கடந்த இரண்டாயிரம் வருஷங்களாக, வந்தவனுக் கெல்லாம தலை வணங்கி காலில் விழுந்துவரும் நடவடிக்கையால் நன்றாய் விளக்கமுறுகிறது. எனினும் தற்கால கல்வி முறையால், நமது நாடு, அடிமைப் பட்டுள்ள தென்றால், அதை யார் பொருட் படுத்துவார்கள்? B.C 300 அதாவது, கிறஸ்துவுக்கு முன், மூன்றாம் நூற்றாண்டில் இந்து அரசர், இந்து மந்திரி, இந்துசேனைத் தலைவர், இந்து ரத, கஜ, துரக, பதாதிகள், சேவகர், சிப்பந்திகள் கோயில் குளம், பிராமணீயம், வேத, ஆகம, புராண, இதிகாசம் நிறைந்தநாட்டை யவன அலெக்ஸாண்டர் (Greek Alexsander) அடிமை படுத்தி இருக்கவும், அதன் பின், மிலேச்சராகிய மகமதியா; இந்து வேதாந்தம் சிறந்த நாட்டை அடிமையாக்கி இருக்க, தற்கால கல்விமுறையால் தனது நாடு அடிமைப் பட்டதென்று வாய் கூசாமல, எந்தநாவால் நமது ஆசிரியர் கூறுகின்றாரென்பது தான் நமக்கு விளங்கவில்லை.

இந்திய நாடு, எந்த முற்காலத்தில் தற்காலத்தை விட, சிறப்புற்றிருந்ததாக சொலலக்கூடும் என்று கேட்கின்றோம்? வேதகாலத்திலா? பிராமண காலத்திலா? சூத்திர காலத்திலா? ஸ்மிருதி காலத்திலா? வெனக் கேட்கின்றோம்? லங்கேஸ்வரனாகிய ராவணனைக கொன்ற காலமா? அல்லது குருட்சேத்திர காலமா? என்று கேட்கின்றோம். அல்லது சங்கராச்சாரியார் வாழ்ந்த காலையிலா வெனக் கேட்கின்றோம்? அல்லது, சேர, சோழ, பாண்டிய ராஜ்ய காலத்திலா வெனக் கேட்கின்றோம்? எந்த காலததில் 16000 சமணரைக் கழுவில் ஏற்றிய காலமெனக் கேட்கின்றோம்? எந்தகாலத்தில் "எங்கள் சிவனு, உங்கள் பெருமாள் என்று மதசசண்டைகள் நடந்தன வென்று கேட்கின்றோம்? பண்டைக் கால ஜன சமூக வாழ்க்கையை உணராமல், வேத ராஜ்ய மென்றும்

தொடர்ச்சி 15ம பக்கம் பார்க்க.

# பாதிரிகளும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(செனிக்யூ பாதிரியார் எழுதியது)



இந்நூலாசிரியர் செனிக்யூ.

குறிப்பு:— தோழர்களே! "பாதிரிகளும், பெண்களும், பாவமன்னிப்பும்" என்ற கட்டுரையானது ஒழுக்கத்திற் சிறந்து விளங்கியவரும், கத்தோலிக் மதத்தின் பாதிரியாராயும், கடவுள் பக்தி மிகுதியும் உடையவராயும் விளங்கிய அறிஞர் செனிக்யூ என்னும் பாதிரியாரால் எழுதப்பட்ட Priest, the Women and the Confessional. என்ற ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பாகும். இந்நூலாசிரியர் கத்தோலிக் கிறிஸ்தவ சமயத்தவர் அல்லவென்றோ, அல்லது அச்சமயத்தின் பேரில் வேண்டுமென்றே குற்றம் சொல்லுகின்றார் என்றோ கூற முடியாது. அச்சமயத்திலே இருந்து கொண்டு அச்சமயத்தில் நடைபெறும் ஊழல்களைக் கண்டித்து மக்களை நன்னிலைக்குக்கொண்டுவர முயற்சித்த ஒரு மதப்பற்றுடைய அறிஞர் என்பதை எவரும் மறுக்க முடியாது. பெரும்பாலும் அவர் கூறும் ஆதாரங்களெல்லாம் தாம் கண்ணுற்றுக் கண்டவைகளும், தம்மைப்போன்று இதர பாதிரிகள் எழுதிய ஆதாரங்களும், உயர்தரப்பாதிரிகளின் வார்த்தைகளும் நிறைமேயாகும். எனவே அறிஞர் செனிக்யூ அவர்களின் சொல்லை எந்தக் கத்தோலிக் நண்பர்களும் எளிதில் உல்லங்கனம் செய்ய முடியாது.

ஆகையால் அவரின் பொன்மொழிகளைப்பொறுமையுடன் படித்து, அவர் கூறும் தீமைகள் தம் மதத்தில் இன்றும் விளைகின்றனவா? அல்லது அக்கொள்கை கை விடப்பட்டதா? என்பதை ஆர அமர ஆலோசித்துத்தங்கள் பகுத்தறிவினால் ஆராய்ந்து, பாவசங்கீர்த்தனத்தினால் கத்தோலிக் சமூகம் அல்லற் படுகிறது என்று கண்டால் அவைகளை அறவே களைய முன் வரும்படி. பொதுவாக கத்தோலிக்கர்களையும், சிறப்பாகக் கத்தோலிக் யுவர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம். கத்தோலிக் பத்திரிகைகள் இதைக்கண்டவுடனே சீற்றங்கொண்டு எங்கள் மீது பாயலாது இந்நூலின் மொழிபெயர்ப்பு முடிவு வரை பொறுமையுடன் வாசித்து விட்டு அப்பாற் தனது அபிப்பிராயத்தை வெளியிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ப-ர்.

## 1-ம் அத்தியாயம்.

### பாவசங்கீர்த்தனத்தினால் பாதிரிகள் முன், பெண்கள், தம் சுயமரியாதையை இழந்து பரிதவித்தல்.

ஏசுகிறிஸ்துவின் உண்மையான சிஷ்யர்களாக வாழ விரும்பும் நாம், உலகில் இரண்டுவிதமான பெண்கள் நிலையைப்பற்றி நாள்தோறும் பிரார்த்தனை செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம்.

முதலாவதாக, பார்ப்பனப் புரோகிதர்களின் ஏமாற்றுக்கூற்றுகளை நம்பி, கணவன் இறந்ததும் அவனுடன் அக்கினிப் பிரவேசம் செய்தும், தங்களுடைய குட்டித் தேவதைகளை திருப்திப் படுத்தவும் முயலும் இந்தியப் பார்ப்பனப் பெண்ணிற்கும், இரண்டாவதாக, ரோமன் கத்தோலிக் பாதிரிகளின் கயவஞ்சகப்பொய் கூற்றுகளுக் கிணங்க, கத்தோலிக் பெண்கள் பாவ சங்கீர்த்தனப் பெட்டியினருகில் இருந்து பாதிரிகள் கேட்கும் கொடுமையானதும், இழிவானதுமான எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கூறி தங்களுடைய கர்த்தரைத் திருப்திப்படுத்த முயற்சிக்கும் பெண்ணுக்குமே பிரார்த்தனை செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ஏனென்றால், பரந்த நோக்கமும், சிறந்த கல்வியும், உயர்ந்த எண்ணமும் உடைய பலமாது சிரோமணிகளை ஆண்களிடத்திலே (பாதிரிகளிடத்திலே) தங்களுடைய மனதைப்பலவந்தமாக திறக்கும்படி செய்வதும், அவர்களிடம் தங்களுடைய ஆத்மீக இரகசியங்களையும், தங்களுடைய தனி வாழ்க்கையிலும் துணை வாழ்க்கையிலும் நடத்திய அந்தரங்க விஷயங்களையும், எந்த கீழ்தரப் பெண்டிரும் எவ்வித கீழ்தரக் காதலரிடமும் கேட்கவும் சொல்லவும் சங்கோசப்படும், அந்தகைய கேவலமான கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறும்படி வற்புறுத்துவதன் மூலம் நடைபெறும் பாவ-சங்கீர்த்தனமானது பார்ப்பனிய மகளிர்கள் உடன் கட்டையேறி உடல் வெந்து உழல்வதைப்பார்க்கிலும்மிகக்கொடுமையானதென நான் கூறுவது ஒரு சிறிதும் மிகையாகா.

பாவ சங்கீர்த்தனம்செய்ய வந்த பெண்கள், அந்தப்பாவ சங்கீர்த்தனப் பெட்டி [Confessional box] யினருகிலே மூர்ச்சித்து விழுந்ததை நான் பலமுறை நேரில் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் அதைப்பற்றி விசாரித்த பொழுது, தாங்கள் கலியாணம் ஆகாத ஆண் மக்களை பாதிரிகளிடம் உலக வழக்கத்திற்கும், வாழ்க்கைக்கும் ஒரு சிறிதும் ஒவ்வாத முறையில் வார்த்தையாடும்படி நேரிடுவது தங்களுக்குப் பிராண அவஸ்தையாக இருக்கின்றதென்று கூறினார்கள். சாகுந்தருவாயிலிருந்த நூற்றுக்கணக்கான-- இல்லை--- ஆயிரக்கணக்கான கன்னிகைகள் மட்டுமல்லாமல் கலியாணமான பெண்களும் கூட என்ன சொல்லுகின்றார்களென்றால் அந்தோ! "பாவ மன்னிப்பின் நிமித்தம் பாதிரிகளிடம் நாங்கள் சென்ற ஒவ்வொரு சந்தர்ப்பமும் இரவில் தேவ பிரசாதத்துக்காக (Communions) சென்றபோது நடந்தவிஷயங்களும்எங்களுடைய நல்வாழ்விற்கு ஹானியுண்டாக்குவதாகவேஇருந்தன. ஒருநாளிலாவது பாவ மன்னிப்புக் கொடுக்கும் பாதிரிகள் கேட்கும் வினாக்களுக்கு சரியான பதில்கூறஎங்கள் மனம் சம்மதித்ததேயில்லை அன்றியும் நாணம் நாவைத் திறக்க விடவில்லை. அதனால் ஆத்மாவிற்கு என்ன நேரிடுமோ? என்பதாகப் பரிதவித்துக் கஷ்டத்துடன் தான் பதில் கூறினோம்" என்று தான் சொல்லியிருக்கிறார்கள்.

மஹா மோசமானதாக இருக்கும் இந்த மத சம்பிரதாயச் சடங்குகளை நான் நிறைவேற்றுவதற்கு முன், உயிர்துறக்க நேரிட்ட பெண் மணியின் இனிய வாயிலிருந்து வெளிப்பட்ட உண்மை மொழிகளைக் கேட்டதும் நான் [illegible]

அதாவது அவள் தன் மனதிலுள்ளவற்றை வெளியிட முடியாமல் மரணாவஸ்தையில் பரிதவித்த சமயங்களில் அவளுடைய பக்கத்திலேயே இருந்திருக்கிறேன். அவ்வித சமயங்களில் அம்மாது பாவ (சங்கீர்த்தனம்) மன்னிப்பு செய்யும் மரணச் சடங்கு (Absolution) செய்யாமல் மரணமடைந்து விட்டால் [illegible]

ஆனால், ஆயிரக்கணக்கான-- இல்லை-- இலட்சக்கணக்கான இளம் பெண்களும், வயதடைந்த ஸ்திரீகளும் தங்களுடைய நாணத்தினாலும், [illegible] பாதிரிகளுடைய இவ்வித கள்ள நியாயங்களுக்கும் சூழ்ச்சிகளுக்கும் ஆட்படாமல் தப்பியிருக்கிறார்கள்.

பாவ சங்கீர்த்தனம் செய்கின்ற பாதிரிகளுடைய சில ஆபாசக் கேள்விகளுக்கு "ஆமாம்" என்ற விடையைக் கூட மறுமொழியாக அளிக்க அவர்கள் பின் வாங்குகிறார்கள்.

பிராமண ஸ்திரீகளைப் போல நெருப்பில் விழுந்தாலும் சாம்பலாகத்துணிகின்றார்களே ஒழிய, தங்களுடைய அந்தரங்க விஷயங்களை ஆண்மக்களின் முன் வெளிப்படுத்த உடன்படுகின்றார்களில்லை. சில சந்தர்ப்பங்களில் கடவுளுடைய ஆக்ஞைக்குப் பயந்தும், தங்களுடைய பாவக் காரியங்களைப் பாதிரிகளிடம் தெரிவித்து அவர்களிடமிருந்து பாவமன்னிப்படைந்தாலொழிய தங்களது பாவமூட்டை ஒழியாதென்ற கொள்கைக்குப் பயந்தும்—அவற்றை வெளியிட முற்பட்ட போதிலும் பெண்களுக்குரிய ஒழுக்கமானது, மோசமான, கொடுமையான நிச்சயச் சட்டங்களை விட அவர்கள் மனதில் பன் மடங்கு அதிகரித்தெழுவதாக

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# இந்தியாவில் பெண்கள் நிலை.

## ஐரோப்பாவில் ஈ. வெ. ரா. உபந்யாசம்.

ஐரோப்பாவில் ஒரு பெண்கள் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. இராமசாமி இந்தியப் பெண்கள் நிலைமையைப்பற்றிப்பேசியதாவது:—

தோழர்களே! இந்தியப்பெண்கள் நிலைமையைப்பற்றி பேசுவதென்றால் அது மிகவும் பரிதாபகரமான விஷயமாகும். அங்குள்ள ஆண், பெண் வித்தியாசமானது முதலாளி தொழிலாளிக்கு உள்ள வித்தியாசத்தைவிட மிகக் கடினமானது. ஒரு தொழிலாளியானவன் எப்படியாவது பணம் சம்பாதித்துக் கொண்டானேயானால் அவன் மெள்ள மெள்ள முதலாளி கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடியவனாகி விடுவான். ஆனால் இந்தியப் பெண்களோ அப்படியில்லை. அவர்கள் எந்த நிலையிலும் ஆண்களுக்கு அடிமையாகவும், அவர்களுடைய அனுபவப்பொருளாகவும், ஆண்களையே தெய்வமாகக்கருதி பூஜித்துத் தொண்டு செய்து கொண்டிருக்கவேண்டியவர்களாகவும் இருப்பார்கள்.

### பெண், இழிவான பிறவி

இந்தியாவில் இந்து பெண்கள் இந்துமத சம்பிரதாயப்படி பாப ஜன்மங்களாகக் கருதப்படும். அதாவது சென்ற ஜன்மத்தில் அவர்கள் செய்த பாப காரியங்களால் இந்த ஜன்மத்தில் பெண்களாய்ப் பிறக்கிறார்கள் என்பது ஒரு சாஸ்திர விதி. ஒரு குடும்பத்தில் எத்தனை பெண் குழந்தை இருந்தாலும் அக்குடும்பத்திற்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால் அதை பிள்ளையில்லாத குடும்பம் என்றே சொல்லுவது வழக்கம். ஒரு வீட்டில் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அது அவ்வீட்டுக்கு அதிருப்தி தரத்தக்க விஷயமாகவே கருதப்படும். ஆண் குழந்தை பிறந்தால் வெகு திருப்தியுடன் ஆடம்பரச் செலவு செய்வார்கள். ஏதாவது ஒரு சபை அல்லது கூட்டம் யாரும் பேசாமல் நிசப்தமாய் இருப்பதாய் இருந்தால் அதைப்பார்த்து "என்ன பெண் பிறந்த வீடுபோல் இருக்கிறதே" என்று கேட்பது வழக்கம். எவ்வளவு பெண் குழந்தை இருந்தாலும் ஒருவனுக்கு ஆண் குழந்தை இல்லாவிட்டால் வேறு குடும்பத்தில் இருந்து ஒருஆண்பிள்ளையை சுவீகாரம் எடுத்துக்கொள்வார்களே ஒழியபெண் குழந்தையை வார்சு குழந்தையாய்க் கருதுவதில்லை.

பெண்கள் எந்த நிலையிலும் சுதந்திரத்திற்கு அருகதை அற்றவர்கள் என்பதே மதசம்பிரதாயம். ஒரு பெண்ணானவள் குழந்தைப் பருவத்தில் தாய் தகப்பன் மேற்பார்வையிலும, வாலிபப்பருவத்தில் புருஷன் மேற்பார்வையிலும், வயோதிகப்பருவத்தில் தன் மக்கள் மேற்பார்வையிலும் இருக்கவேண்டுமே ஒழிய, சுதந்திரமாய் இருக்க விடக்கூடாதென்று மனுதர்ம சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதுமாத்திரமல்லாமல் பெண்களை கடவுள் பிறவியிலேயே விபசாரியாய் பிறப்பித்திருப்பதால், அவர்களை சர்வ ஜாக்கிரதையாக காவல் காக்கவேண்டும் என்று மத சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

### பெண்களுக்கு கல்விகூடாது.

பெண்களுக்கு கல்வி கற்பிப்பதும் மதசாஸ்திர விரோதமான காரியமாகும். இவ்வளவு நாகரீகமான காலத்திலும் இந்தியாவில் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு ஒருவர் வீதந்தான் பெண்கள் கல்வி கற்றிருக்கக்கூடும். அப்படிக் கற்றிருந்தாலும் அந்தக்கல்வி அவர்களது வாழ்க்கையில் யாதொரு காரியத்திற்கும் பயன்படுவதில்லை. பெண்களுக்கு கற்றுக்கொடுப்பதெல்லாம் வீட்டு சமையல் வேலை முதலிய வேலைகளைச்செய்யத்தான் கற்றுக்கொடுப்பது வழக்கம். சிறு பருவமுதலே அவர்களை ஆண் குழந்தைகளிடம் இருந்து பிரித்து வைக்கவேண்டுமென்று கருதுவதால் பொதுப்பள்ளிக்கூடங்களுக்கு அவர்களை அநேகமாய் அனுப்பமாட்டார்கள். மற்றபடி சிறு குழந்தைப்பருவத்தில் யாருக்காவது சங்கீதம் பாட்டு முதலியவை கற்றுக் கொடுக்கப்பட்டாலும் அவை அப்பெண்ணின் வாழ்க்கையில் சிறிதும் பயன்பட சந்தர்ப்பம் இருப்பதே கிடையாது.

### கல்யாணம்.

கல்யாண விஷயம் என்பது மிகவும் பரிதாபகாமானது. அநேகமாக பெண்களுக்கு 10, 12 வயதிற்குள்ளாக கல்யாணம் ஆகிவிடும். பிறந்த ஒரு வருஷத்திலிருந்தே எப்பொழுது வேண்டுமானாலும் கல்யாணம் செய்யலாம். சில வகுப்புகளில் எப்படியானாலும் 10 வயதிற்குள் கல்யாணம் செய்தாகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் உண்டு. கல்யாணம் என்பது பெண்கழுத்தில் ஆண் ஒரு கயிற்றை கட்டுவதுதான் கல்யாணம் தாலிகட்டுகின்றது என்கின்ற சடங்கு வரையிலும் பெண்ணுக்கு மாப்பிள்ளை இன்னார் என்றே அடையாளம் தெரியாது. மாப்பிள்ளைக்கும் பெண் இன்னார் என்றே அடையாளம் தெரியாது. கல்யாணம் என்பது பெண் மாப்பிள்ளை ஆகியவர்களின் பெற்றோர்கள் செய்துகொளளும் ஏற்பாடே ஒழிய, பெண் மாப்பிள்ளை ஆகிய இருவருடைய சம்மதம் என்பது கிடையாது. பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் பொருத்தம் என்பது ஜோசியத்தின் மூலமும், சகுனத்தின் மூலமும் பார்ப்பதேதவிர பிரத்தியட்ச யோக்கியதை முதலியவைகளைக்கொண்டு பார்ப்பதில்லை. 5, 10 வயதுள்ள சிறு பெண்களுக்கு 40, 50 வயதுள்ள மாப்பிள்ளையை கல்யாணம் செய்வதும் உண்டு. 10 வயது பையனுக்கு 20 வயது பெண்ணை கட்டுவதும் உண்டு. 60, 70 வயது கிழவனுக்கு சிறு பெண்களை கல்யாணம் செய்வதும் உண்டு. சென்ற வருஷத்தில்கூட 90 வயது கிழவன் ஒரு சிறு பெண்ணை கலியாணம் செய்து கொண்டான். பெண்ணின் தாய் தகப்பன்மார் யாருக்கு கல்யாணம் செய்து கொடுப்பதானாலும் பெண் சம்மதித்துதான்—ஆகவேண்டும். பெண் ஏதாவது தனது அதிருப்தியை காட்டினால் அது பெண்ணின் கற்பிக்கே விரோதமானது என்று சொல்லி விடுவதால் பெண்தன்னை யாருக்கு கொடுக்கப்படுவதானாலும் சம்மதித்தாகவேண்டும்.

### புருஷன்வீட்டில் பெண் நிலைமை.

கல்யாணம் செய்யப்பட்ட பெண் புருஷன் வீட்டு வேலைக்கே கல்யாணம் செய்யப்பட்டதாய் கருதி புருஷன் வீட்டில் மாமனார், மாமி, நாத்தி, கொழுனன் ஆகியவர்களுக்கு வேலையாளாக இருந்து சகல வேலையையும் பார்க்கவேண்டும். சில வகுப்புகளில்பெண் புருஷனின் தகப்பன்மாருக்கும், சகோதரர்களுக்கும்கூட பெண்சாதியாய் இருக்கவேண்டும். இதற்குசட்டத்திலும்இடமுண்டு. பெண் தாய் வீட்டிலிருந்து புருஷன் வீட்டிற்கு போகும்போது அழுதுகொண்டே போகும். பெற்றோர்கள் பெண்ணுக்கு சொல்லி அனுப்பும் புத்திமதி யெல்லாம் "புருஷன் வீட்டில் உள்ளவர்களுக்கு பணிந்து, நல்ல வேலைக்காரியாய் நடந்துகொள்" என்றுதான் சொல்லி அனுப்புவார்கள். அந்தப்பெண்ணை புருஷன் எவ்வளவு கொடுமையாய் நடத்தினாலும் கேள்வி கிடையாது. சில சமயங்களில் புருஷனுடைய பெற்றோர்கள் கொடுமைப்படுத்தினாலும் கேள்வி கிடையாது. புருஷன் எவ்வளவு அயோக்கியனாகவும், குடிகாரனாகவும், சூது, விபசாரம், செய்பவனாகவும், இருந்தாலும் பெண்ணுக்கு கேள்க அதிகாரம் கிடையாது.

அவன் வரும்படி இல்லாமல் திரிந்தாலும் பெண் தானே கூலி வேலை செய்தாகிலும் அவனுக்கு போடவேண்டும். பெண் இவற்றையெல்லாம் தனது முன் ஜன்மத்தின் கர்ம பலனென்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

### கல்யாணரத்து கிடையாது.

புருஷன், மேல்கொண்டு எத்தனை பெண்சாதி வேண்டுமானாலும் கல்யாணம் செய்து கொண்டு வாழலாம், எத்தனை தாசிகளை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இந்து மத கடவுள்கள் 60 ஆயிரம் பெண்களை கட்டிக்கொண்டதாகவும், 12 ஆயிரம் தாசிகள் வைத்திருந்ததாகவும் மத ஆதாரங்கள் உண்டு. எந்த நிலையிலும் கல்யாண ரத்து என்பது கிடையவே கிடையாது. பெண்ணுக்கு ஒரு தடவை கல்யாணம் ஆகிவிட்டால் சாகும்வரை அவனிடமேதான்இருந்தாகவேண்டும்.புருஷன் கொடுமை சகிக்காமல் பெண் தாய் வீட்டுக்கு போய்விட்டால், புருஷன் கோர்ட்டில் தாவா செய்து டிக்ரி பெற்று பெண்ணை சுவாதீனம் செய்து கொள்ளலாம். ஆனால் பெண்ணுக்கு புருஷனிடமிருந்து ஜீவனாம்சம் பெறத்தான் பாத்தியமுண்டு. அதுவும் பெண் விபசாரி என்று புருஷன் ருஜுப்படுத்திவிட்டால், அந்த ஜீவனாம்சமும் இல்லை.

### சொத்துரிமை.

பெண்ணுக்கு தகப்பன் சொத்தில் சிறிதும் பங்கு கிடையாது. புருஷன் சொத்திலும் பங்கு கிடையாது

### விதவைத்தன்மை.

புருஷன் இறந்துவிட்டால் பெண் விதவை என்று அழைக்கப்படுவாள். புருஷன் இறக்கும்போது அவள் எவ்வளவு செல்வத்துடன் மேன்மையாய் இருந்தாலும், கணவன் இறந்தவுடன் இவள் ஒரு அபசகுனஉருவமாகஆகி விடுவாள். நகை அணியக்கூடாது, புஷ்பம், வாசனை, நல்லஉடுப்பு ஆகியவை அணியக்கூடாது. ஒரே வேளைஅதுவும் சத்தற்ற ஆகாரந்தான் சாப்பிட வேண்டும். சில வகுப்புகளில் தலையை மொட்டையடித்து, வெள்ளை உடுப்பு அணிந்து கொண்டு வீட்டிற்குள்ளாகவே வீட்டு வேலைகள் செய்து கொண்டு இருக்க வேண்டும். விதவையைக் காணுவது அபசகுனமாகப் பாவிக்கப்படும். விதவைக்கு குடும்ப காரியங்களில் அல்லது சடங்குகளில் எவ்வித பாத்தியமும் கிடையாது. சாப்பாட்டுக்கு மாத்திரம் பெற பாத்தியமுண்டு. வேறு கல்யாணம் செய்து கொள்ளவும் கூடாது. 5-அல்லது 10 வயதில் புருஷன் இறந்து போனாலும் பெண் கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது. ஆனால் புருஷன் தனது பெண்ஜாதி இறந்த 10 நாளிலேயே கல்யாணம் செய்து கொள்ளலாம்.

அவன் எவ்வளவு கிழவனாயிருந்தாலும் மறுமணம் செய்து கொள்வதில் எவ்வித ஆட்சேபணையும் கிடையாது புருஷன், குழந்தை இல்லா விட்டாலும், ஆண் குழந்தை இல்லா விட்டாலும் வேறு கல்யாணம் செய்து கொள்ளலாம். பெண் தனது குழந்தை பருவத்தில் புருஷன்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

# கீழ் நாட்டு பல்கலைக்கழகம்.

## வேலையில்லாத் திண்டாட்டமும், ருஷியத்திட்டமும்.

சென்னை கீழ்நாட்டுப்பல்கலைக்கழகத்தின் வருடப்பூர்த்தி விழாவை 27-1-33ந் தேதி மாலை 5-30மணிக்கு சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் தலைமையில் கான மந்திரத்தில் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஏராளமான கனவான்களும், பெண்களும் விஜயம் செய்திருந்தனர்.

### வேலையில்லா திண்டாட்டம்.

"வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்க முயற்சி" என்னும் பொருள் பற்றி தோழர் டப்ளியூ ரான்வன் பேசியதாவது:—

வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிக நெருக்கடியான நிலைமையை அடைந்து வருகிறது. 1922ம்வருடத்தில்மாத்திரம்ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் 2, 50, 00, 000 ஜனங்கள் வேலையில்லாமலிருந்ததாக கணக்கெடுத்திருக்கிறார்கள். இந்தியாவில் 30, 00, 000 ஜனங்களுக்கு வேலையில்லையென கணக்கெடுத்திருக்கின்றார்கள். இது விஷயத்தில் சரியான புள்ளி விபரங்கள் எடுக்கப்படவில்லை யென்றே நினைக்கிறேன் உலகத்தில் ஜனங்களுக்கு வேலைகொடுக்க (ஜனங்களுடைய ஜீவனோபாயத்துக்கு) போதிய வசதிகளும் இடமும் இருக்கிறது. இன்னும் பல உபாயங்களையும், வழிகளையும் ஜனங்கள் கண்டு பிடித்து கையாடவில்லை. தற்போதைய பொருளாதார நிலைமையில் சில கோளாறுகள் ஏற்பட்டுவிட்டாலும், ஜனங்களுக்குள் பரஸ்பர நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டதாலுமே, பணம் வெளியே அதிகம் புரளவில்லை. பணம் புரளாததால் விலைவாசிகள் குறைந்தன. விலைவாசிகள் குறைந்ததால் தொழிற்சாலைகளுக்கும் வியாபாரிகளுக்கும் விவசாயிகளுக்கும்பெருத்த நஷ்டமேற்பட்டது. இதனால் வேலையில்லா திண்டாட்டமும தொழிலாளர் கஷ்டங்களும் அதிகரித்தன. இருக்கிற பொருளை (செல்வத்தை)—பணத்தை, சரியாக எல்லா ஜனங்களும் அனுபவிக்கும்படியான நிலைமை இல்லாமலிருக்கிறது இதுவும் வேலையில்லா திண்டாட்டத்துக்கும், பொருளாதர கஷ்ட நிலைமைக்கும் ஒருகாரணமாகும்.

தற்காலத்திய கல்வி முறையும் இந்நாட்டு வேலையில்லா திண்டாட்டத்துக்கு முக்கிய காரணமாகும். தற்காலப் பள்ளிக்கூடங்களில படிக்கும் மாணவர்களில் நூறறுக்கு எழுபத்தைந்து போகளுக்கு வேலை கிடைப்பதில்லை. பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வரும்போதே எங்கே யாவது குமாஸ்தாவேலை காலியிருக்கிறதா என்று தேட ஆரம்பித்து விடுகிறார்கள். ஒரு குமாஸ்தா வேலைக்கு ஆயிரம் பேர் போட்டி போடுகிறார்கள். இவர்களுக்கு கொடுக்கப்படும் கல்வி இவர்களை வேறு வழிகளில் ஜீவனம் செய்யமுடியாமல் செய்து விடுகிறது. இவர்கள் மீண்டும் தங்கள் கிராமத்துக்கு செல்ல முடியவில்லை, கிராமத்துக்கு சென்றால் இவர்களுக்கு பிழைக்க வழியில்லை ஒரே விதமான (குமாஸ்தாவேலைக்கு மாத்திரமே தயாராக மாணவர்களை) தயாரிக்கும் இந்த கல்வி முறை ஒழியவேண்டும். வயிற்றுக்கு ஆகாரம் கிடைத்தால் போதுமென்ற ஒரேநோக்கததையும், ஆசையும் சிறுவர்கள் மனதில் உண்டு பண்ணும் தற்கால கல்வி முறை ஒழிய வேணடும் இந்த தேசத்தில் ஆங்கிலம் படித்தவர்கள்—ஆங்கிலம் பேசுகிறவர்கள் அளவுக்கு மிஞ்சி விட்டார்கள். தேசத்துக்கும், பொதுஜனங்களுக்கும் தேவைக்கு மேல் தற்கால கல்வி முறையில் மாணவர்களை தயாரித்து விட்டோம்.

### அட்வகேட் ஜெனரல், தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் பேசியது.

இந்த சங்கத்தின் பெயர் அதிக பொருத்த மானதாய் இருக்கிறது. இந்த தேசத்துக் கேற்றதாயும், புராதன மாயுமுள்ள பல்கலைகளை அபிவிருத்தி செய்யவும், பொதுஜன சேவை செய்யவுமே இந்தக்கழகம் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இதே நோக்கங் கொண்ட பலர் இந்தக் கழகத்தினுதரவில் ஒன்று கூடி தங்கள் அபிப் பிராயங்களைக் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவதால் அதிக நன்மை ஏற்படும். நாளுக்கு நாள் நமக்குள் ஏற்பட்டுவரும் குறுகிய நோக்கங்களை விட்டொழித்து, பொதுஜன க்ஷேமத்துக்காக நாம் ஒவ்வொருவரும் தங்கள் தங்களால்கூடிய வரை சேவை செய்ய வேண்டியது அவசியம். பொருளாதாரம், சுகாதாரம், கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலிய பலவழிகளிலும் நமக்கு தற்சமயம் அபி விருத்தியடைய போதிய சமய சந்தர்ப்பங்களில்லை., எனவே, ஷை சமய சந்தர்ப்பங்களும் வசதிகளும ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அறிவு, கல்வி, ஞானம் இந்த வெளிச்சத்தை பெற்றவர்கள், ஷை வெளிச்சத்தை மற்ற ஜனங்களுக்கும் அளிக்க வேண்டும். இந்த சங்கம் இது விஷயமாக நல்ல வேலை செய்து வருகிறது. சர்க்காரும், பொதுஜனங்களும் இது விஷயத்தில் முயற்சியெடுக்கும்படி தூண்ட வேண்டும்.

உலக முழுவதும் பொருளாதாரக் கஷ்டமும் வேலையில்லா திண்டாட்டமும் ஏற்பட்டி ருக்கிறது. ஷை நிலைமை நாளுக்கு நாள் அதிக மோசமாகிக் கொண்டிருக்கிறது. எங்கும் இதே பேச்சாகத்தா னிருக்கிறது. மேனாட்டு ஆராய்ச்சிக் காரர்கள் பலர், இந்த நிலைமையை கூடிய சீக்கிரம் சீர்படுத்தக் கூடிய யோசனைகளைப் பற்றி ஆலோசித்து வருகின்றனர்

### ருஷிய திட்டம்.

ருஷியாவில் ஒரு திட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் பல கெடுதல்கள் இருந்தாலும் சிற்சில மேலான நன்மைகளுமிருக்கின்றன. ஷை ருஷ்ய திட்டம் உலக முழுதுக்குமே நல்ல பாடம் கற்பிக்கக கூடியதாயிருக்கிறது. கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்தில் ருஷியா இப்போது உலகத்திலேயே தலை சிறந்து விளங்குகிறது. தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கு முள்ள சம்மந்தம் நிர்ணயிக்கப்பட வேண்டும். கைத்தொழில் அபிவிருத்தியின்றி நாம் சுபீக்ஷமாக வாழமுடியாது.

நமது தேச ஜனங்கள் வாழ்க்கைக்கும் உலகத்தில் மற்ற பாகங்களில், அதிலும் முக்கியமாய் மேனாட்டிலும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் ஜனங்கள் நடத்திவரும் வாழ்க்கைக்கும் அதிக வித்தியாசமிருந்துவருகிறது. நமது வாழ்க்கை மிக எளிய வாழ்க்கை. இரண்டு நாளுக்கு ஒரு வேளை போஜனம் கிடைத்தாலும், ஜனங்கள் திருப்தியடையக் கூடியவர்களாக இருக்கிறாகள். அதனால் தான் நமது தேசத்திலுண்டான வேலையில்லா திண்டாட்டத்தைப்பற்றி மற்ற தேசங்கள் அதிகமாக கவனிக்க வில்லை. இந்தசங்கத்தில் அதிகமான பெண்களும் அங்கத்தினராக சேர்ந்து தேசகைங்கரியம் செய்ய முன் வந்திருப்பதைப் போற்றுகிறேன். நமது பொது இயக்கங்களில் பெண்கள் ஆதரவு நமக்கு இருந்தால்தான், ஷை இயக்கங்களை வெற்றிகரமாய் நடத்தக் கூடும். மேனாட்டு பெண்கள் இயக்கத்தை அடிப் படையாகக்கொண்டு நம் நாட்டில் பெண்கள் இயக்கம் ஏற்பட்டிருந்த போதிலும் மேனாட்டில் தங்கள் சுதந்திரததுக்காகவும் உரிமைகளுக்காகவும் பெண்கள் அதிக கஷ்டப்படவும் கிளர்ச்சி செய்யவும் நேர்ட்டது போல நம் நாட்டில் இல்லை. நாமாகவே பெண்களுக்கு சகல உரிமைகளையும் வழங்கத் தயாரா யிருக்கிறோம்.

வந்தனோபசாரத்துக்குப் பின், தோழர் வைதேகியின் சங்கீத கச்சேரி நடந்தது. (தமிழ் நாடு.)

---

### போலீஸ் இலாக்கா

20-1-33- தேதி வெளியான சர்க்கார் அறிக்கை:—

சென்ற ஜூன் மாதம் இங்கிலாந்தில் நடந்த போலீஸ் சர்விஸ் பரீக்ஷையில் கலந்து கொள்வதற்காக ஆசியாவில் குடியேறிய சில மாணவர்கள் சென்றிருந்தார்கள். அவர்களை விசாரித்ததில் பரீக்ஷையில், யார் கலந்துக் கொள்ளலாம் என்ற நியதி தெரியாதென்று தெரி வித்தார்கள்.

1933 வருஷத்திற்குப் பிறகு லண்டன் பரீக்ஷைகளெல்லாம் ஆசியாவில் குடியேறிவர்க ளல்லாத மற்றவர்களுக்குத தான் கலந்து கொள்ள உரிமையுண்டு. இந்திய போலீஸ் செர்விஸ் பரீக்ஷைகளுக்காக இந்தியா, பர்மா, மாணவர்கள் ஒவ்வொரு மாகாண முக்கிய பட்டணங்களிலும் நடத்தப்படும் பரீக்ஷைகளில் கலந்து கொள்ளலாம்.

---

### கோயமுத்தூர்.

15-1-33 இராமநாதபுரம் அகம்படிய வாலிபர் சங்கததினுதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. தோழர் எ.ஆர்.சிவானந்தம் அவாகள் தலைமை வகித்தார். தோழர்களான வள்ளியம்மாள்,மஞ்சுளாபாய்ஜானோஜிராவ்,கிஸன் இரங்கசாமி, சந்தானம் கருப்பண்ண தேவர், டாக்டர்அப்பாஜீ, முருகையா வாத்தியார் முதலியோர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் முன்னுரை கூறியபின் தோழர்களான கிசன், திருவிக்கிரம அய்யர், பி. இரங்கசாமி இவர்கள் "தற்கால உலகில் மனிதர்களின் நிலை" என்பதுபற்றி பேசினார்கள்.

பின்பு தலைவர் முடிவுரை கூறும் பொது மணப்பொருத்தத்தைப் பற்றி நன்குவிளக்குக் கூறினர்.

பின் தோழர் பி. இரஙகசாமி வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் இனிது முடிந்தது.

ஒரு நிருபர்

---

### ஆர். கே. ஷண்முகம்.

தோழர். ஆர். கே. ஷண்முகம அவர்கள் இம்பீரியல் பாங்டைரக்டர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் ஒரு நிருபர்.

---

### கோவை ஜில்லா போர்டு பிரசிடெண்ட்.

கோவை ஜில்லா போர்டு தேர்தலில் தோழர் கனம் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்கள் தலைவராகவும், பழயகோட்டை பட்டக்காரர் உபதலைவராகவும் தேர்ந்தெடுககப் பட்டார்கள்.

---

### கோலாலம்பூர்.

தோழர் ஜி. குமாராசாமி அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு 'ஜபசிங்கம்' என பெயர் வைத்திருக்கின்றார்.

(ஒரு நிருபர்)

# கோவை உபசாரப்பத்திரங்கள்.

## ஈ. வெ. இராமசாமியின் சொற்பொழிவு.

கோவை சுயமரியாதை சங்கத்தாராலும், மற்ற சங்கத்தாராலும் தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு வாசித்துக் கொடுத்த உபசாரப் பத்திர நிகழ்ச்சியும், அவைகளுக்கு தோழர் ஈ. வெ. ரா. அளித்த பதிலும்:—

30—1—33ந் தேதி மாலை 5 மணிக்கு கோவை டவுன் ஹாலில் தோழர் வி. வெரிவாடு செட்டியார் அவர்கள் தலைமையில் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தப்படியே மண்டபம் அலங்கரிக்கப் பட்டும், வெளியிலும், சங்கக்கட்டடத்திலும், வாழைக்கம்பம், தோரணம், வளைவுகள் முதலியவை கட்டப்பட்டு வெகு அலங்காரம் செய்யப் பட்டிருந்தது குறித்த நேரத்துக்கு முன் மண்டபம் முழுவதும் ஜனங்கள் வந்து நிறைந்து சுமார் 1500 பேர்கள் கூடி இருந்தார்கள். அவர்களில் முன்னணியில் இருந்தவர்கள்.

தோழர்கள் அ. ராகவன், டி. எஸ். பாலசுந்தரம் பிள்ளை, சி. பி. முத்துசாமி, நாராயண கவுண்டர், டி. ஆர். சுந்தரம்பி. ஏ. பி. எல்.பொன்னுசாமி பிள்ளை, பழனிபப்பன் பி. ஏ., சி. வரதராஜன், என். சதாசிவம், எஸ். அப்பாஜி, சுந்தரம் செட்டியார் (குனியமுத்தூர். ஆர். இரங்கசாமி, எஸ். ஏ. மாணிக்கம், ஏ. பசுபதியப்பா, ஜெ. என். ஜயகரன், ஈரோடு எம். சிக்கையா, எம். அப்பையா, ஈ. வி. உமர்நாகான், ஆர் ஜெ. இராமசாமி, ஆர். நஞ்சையா, பங்காரு, சங்கரலிங்க நாடார், சுந்தர நாடார், சின்னமருதாசலபண்ணாடி, அருணாசலம், கிருஷ்ணய்யா, கொமரப்பன் இரங்கநாதன், வெங்கட்டரத்னம், ஏ. ஷண்முகம், ஏ. ஆர். சிவானந்தம், ஆர். நஞ்சையா, சி. செல்வராஜ், வி. சுப்பிரமணியம், சி. கே. சுபபிரமணியம், கே சுப்பிரமணியம், ஆர். கே. வேலாசாமி, ஏ. பொன்னுசாமி, பி. இரங்கசாமி, என். கே. கஸ்தூரி, எம். ஆர். ராமதாஸ், எம்.சீத்தாராம, சி. எஸ். குப்புசாமி, கெம்பையா, முனுசாமி, சி. கே. சந்தானம், வி. ரங்கராஜ், வி. செகப்பண்ணன், கே. எஸ். சுந்தரராஜு, சி. எம். சேகரம், சுப்பையா, கோபால், ஜெ. ஆர். கோணையா, சி. எம். ஜங்கமையா, ஈ. வி. சோமசுந்தரம், கே. ஆர். சுப்பிரமணியம், எம். வேணுகோபால், கே. ஜானேஜி ராவ், கருப்பண்ணன், எம். கே. திருப்பதி, சி. சீனிவாசன், சி. கே. இரங்கசாமி, எஸ். எஸ். முத்து, கே. பொன்னையா, ஆர். கிஸன், மற்றும் இருகூர், குனியமுத்தூர், குரிச்சி, புலியகுளம், சூலூர், அருகம்பாளையம் முதலிய இடங்களிலிருந்து பல தோழர்கள் விஜயம் செய்திருந்தனர்.

சரியாய் 5-20க்கு தோழர் வி. வெரிவாடு செட்டியார் அவர்களை தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்களால் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டதும், தலைவர் தலைமை ஏற்று கூட்டத்தின் நோக்கத்தைச் சொல்லி உபசாரப் பத்திரங்களை வாசிக்கச் சொன்னார். முதலில்தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் சுயமரியாதை இயக்க சார்பாகவும், தோழர் ஆர். கிசன் அவர்கள் சுயமரியாதை இயக்க வாலிபர் சங்க சார்பாகவும் உபசாரப் பத்திரங்களை முறையே வாசித்தார்கள்.

### சீர்திருத்தமும்—பொதுநலமும்—புரட்சிக்கு எதிர்ப்பு

### புரட்சி வேண்டும்.

#### ஈ. வெ. ராமசாமி பதில்.

பிறகு பெருத்த கரகோஷத்தினிடையே தோழர் ஈ. வெ. ராமசாமி எழுந்து உபசாரப் பத்திரங்களுக்கு பதில் சொன்னதாவது:—

தலைவரவர்களே! கோவை சுயமரியாதை இயக்கத் தலைவரே !! வாலிபத் தோழர்களே !!! மற்றும் இங்கு கூடியுள்ள தோழர்களே !!!! உங்கள் பத்திரங்களின் மூலம் உங்களுக்குள்ள ஆவேசம் இன்னதென்று நன்றாய் விளங்குகின்றது அவற்றையெல்லாம் என்னைப் புகழும் வழியில் காட்டி விட்டீர்கள். நான் அப்புகழ்ச்சிகளை ஒப்புக் கொள்ளக் கூடுமா எனபதை நீங்களே யோசித்துப் பாருங்கள். ஆனால் ஒன்றை மட்டும் ஒப்புக் கொள்ளுகிறேன். அதாவது என்னனென்ன காரியம் நான் சாதித்து விட்டதாகக்குறிப்பிட்டிருக்கிறீர்களோ, அந்த காரியங்கள் எல்லாம அவசியம் நடந்தாக வேண்டும் என்றும், அதற்காகநாம் எல்லோரும் பாடுபட வேண்டும் என்றும் ஒப்புக் கொள்ளுகிறேன்.

#### சீர்திருத்தம்.

தவிர அப்பத்திரங்களின் இரண்டொரு இடங்களில் நமது இயக்கம் சீர்திருத்த இயக்க மென்றும், பொது நல இயக்கமென்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள், அவைகளை நான் ஒப்புக் கொள்வதில்லை. நமது இயக்கம் சீர்திருத்த இயக்கமல்ல. ஆனால் அழிவு வேலை இயக்கம் என்றே சொல்லுவேன். சீர்திருத்தம் என்றால் எதை சீர்திருத்துவது? இன்றைய நிலைமையில் மனிதவாழ்க்கைக்கு, சமத்துவத் தன்மைக்கு பெரும்பான்மையானமக்களாகிய ஏழை மக்கள்படும்கஷ்டமும். தரித்திரமும் இழிவும் நீங்குவதற்கு அனுகூலமாக என்ன கொள்கைகள், நடை முறைகள் . இங்கு இருக்கின்றன? என்று பாருங்கள். அதாவது மத சம்பந்தமாகவோ கடவுள் சம்பந்தமாகவோ, பொருளாதார முறை சம்பந்தமாகவோ, அரசியல் சம்பந்தமாகவோ ஏதாவது ஒரு கொள்கை மனித சமூக ஜீவகாருண்யத்திற்காகவது சமத்துவத்திற்காவது ஏற்றதாய் இருக்கின்றதா? என்று பாருங்கள். இருந்தால்தானே சீர்திருத்தம் செய்வீர்கள்? மதம்-கடவுள்பொருளாளன் அரசன் இவர்கள் எல்லோரும் மக்களை வருத்தி வஞ்சித்துக்கொடுமைப்படுத்தி வாழும்மக்களாவார்கள். இவர்கள் எல்லோருமே ஒரு தாயின் வயிற்றுப்பிள்ளைகள். ஆளுக்கொரு வேலை பார்க்கின்றவர்கள். இவர்களுக்கு அனுகூலமாகவே எல்லாம் இருக்கின்றன. இவைகளில் எதை சீர்திருத்தம் செய்தாலும் செய்ய நினைத்தாலும் அவை இன்னும் வெகு காலம் நிலைத்திருப்பதற்கு தான் பயன்படுமே தவிர மாறுதலை உண்டாக்க முடியாது. இவைகள்எல்லாம் அழிந்தொழிந்தால் ஒழிய கஷ்டம்நீங்கப்போவதில்லை.

உதாரணமாக "மகா விசேஷம் பொருந்திய ஒரு (பேரூர்) தீர்த்தக்குளத்தைஎடுத்துக்கொள்ளுங்கள். அது "ஒரு கடவுளால் உலகிலுள்ள மக்களின் சர்வபாவமும் நீங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டபொற்றாமரைக்குளமாய்" இருக்கலாம். அதன்புராணமானது "அக்குளத்து நீரில் ஒரு துளி மேலே பட்ட மாத்திரத்தில் சகல பாபமும் தீர்ந்து வெகு காலத்திற்கு சொர்க்கத்தில் இருக்கக் கூடிய மகத்துவமுடைய" தென்று கடவுளே சொன்னதாக இருக்கலாம். ஆனால் இன்றைய தினம் அக்குளத்து நீரில் ஒரு துளி மேலே பட்டால் சொரியும் ஊரலும், குஷ்டநோயும் உண்டாவதாய் இருந்தால் அதை நீங்கள் என்னசெய்வீர்கள்? உங்கள்முனிசிபாலிட்டி என்ன செய்யும்? தண்ணீரை சுததமாக்க மருந்துகள் போடலாம் என்று சொல்லுவீர்கள். மருந்துகள் போட்டபின்னும் அத்தண்ணீரின் குணம் அப்படியே இருந்தால் என்ன செய்வீர்கள்? தண்ணீரையெல்லாம் இரைத்து வெளியில் கொட்டி கிணற்றை சுத்தம் செய்வீர்கள். அந்தப்படி சுத்தம் செய்த பின்பும் அத்தண்ணீரின் குணம் அப்படியே இருந்தால் பிறகு என்ன செய்வீர்கள்? அக்கிணற்று நீர் ஊற்றமே விஷத்தன்மை பொருந்தியது என்று கருதி அக்குளத்தில் யாரையும் இறங்கச் செய்யாமல் செய்து குப்பை செத்தைகளைக் கொட்டி அதை மூடி விடுவீர்களா இல்லையா? இதைச் செய்யாமலிருந்தால் முனிசிபாலிட்டியாரையாவது, பொது மக்களையாவது அறிவுடைய மக்கள் என்று நாம் கூறுவோமா?

ஆகவே மனித சமூகத்திற்கு தீங்கை இழைத்து வரும் விஷயம் கடவுள் சொன்னதானாலும், மதம் சொன்னதானாலும் அல்லது கடவுளும், மதமும், அரசாங்கமும் ஆனாலும் அவைகளை அழிக்கத் தைரியம் கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் வெகு காலமாகவே முன்னோர் காலந்தொட்டு மத சீர்திருத்த வாதிகளாகவும், கடவுள் சீர்திருத்த வாதிகளாகவும், ஒழுக்க சீர்திருத்த வாதிகளாகவும், அரச சீர்திருத்த வாதிகளாகவும் இருந்து பார்த்தாய் விட்டது. நமது முன்னோர்கள் காலம் தொட்டு ஆயிரக்கணக்கான வருஷங்களாய் சீர்திருத்த வாதிகளாய் இருந்தும்பார்த்தாய் விட்டது. எந்த துறையில் சீர்திருத்தமடைந்திருக்கிறோம். ஏழை "சீர்திருத்த மடைந்து" நாளுக்கு நாள் பட்டினியும், நோயும்இழிவும் அடைந்து கொண்டே போகிறான். பணக்காரனும் சோம்பேறியும் சீர்திருத்தமடைந்து நாளுக்குநாள் பெரும் பணக்காரனாகி, பிரபுவாகி, ஜமீனாகி, ராஜாவாகி தலைமுறை தலைமுறை ஜமீனும், ராஜாவுமாய் ஆகிக்கொண்டே போகின்றான். சீர்திருத்தத்தின் பலனைக்காண்பதற்கு இன்னும் வேறு என்ன உதாரணம்வேண்டும். ஆகவே ஏழைத்தன்மை, பணக்காரத்தனமை என்கின்ற இரண்டு தன்மையும் உலகில் இருக்கக்கூடாது என்று அவைகளை அடியோடு அழிப்பது நல்ல வேலையா? அல்லது அத்தன்மைகள் எந்த ரூபத்திலாவது என்றும் இருக்கும்படி சீர்திருத்தம் செய்வது நல்ல வேலையா? என்று யோசி

...த்துப்பாருங்கள். அழிவு வேலைக்கு எதிர்ப்புத்தான், சீர்திருத்த வேலை என்பது தீமைகளுக்கு காவல்தான் சீர்திருத்தம் என்பது. ஆகவே தீமைகளை அழிக்க வேண்டுமானால் அவற்றின் காவல்களையும், காப்புகளையும், முதலில் நிர்த்தூளியாக்கவேண்டும்.

அரசனையானாலும், மதத்தையானாலும், கடவுளையானாலும், நாம் எதிர்ப்பதும், அழிக்க முற்படுவதுமான காரணமெல்லாம் இவை தீமைக்கு காவலாய் இருக்கின்றன என்கின்ற ஒரே நோக்கமேயல்லாமல் அவைகளிடம் நமக்கு பொறாமையோ, துவேஷமோ ஏற்பட்டதாலல்ல. ஏழ்மைக் கஷ்டமில்லாமலும், பணக்காரக்கொடுமை இல்லாமலும், பார்ப்பன உயர் சாதி இல்லாமலும்—மற்றைய தாழ்ந்த ஜாதி இல்லாமலும் முதலாளி ஆதிக்கமில்லாமலும்—கூலி அடிமைத்தன்மை இல்லாமலுமிருப்பதற்கு ஆதாரமான மதம், கடவுள், அரசன், சட்டம், நீதி, தர்மம், ஆகியவர்களை நாம் அழிப்பதில்லை. அவைகளைப்பற்றி நமக்கு கவலையே இல்லை. இவர்கள் விஷயத்தில் நாம் மதத்துரோகியோ, கடவுள் துரோகியோ, ராஜத்துரோகியோ சட்டம்மறுக்கவோ, அதர்மக்காரனாகவோ நாம் சிறிதும் விரும்பவில்லை.

ஏழை பணக்காரத்தன்மையையும் கீழ்மேல் ஜாதியையும், முதலாளிஅடிமையையும்கொண்டதான நிலைமைகள் நடைபெற ஆதரவாயிருக்கும் கடவுள், மதம், அரசன் தர்மம் சட்டம் ஒழிந்தே ஆகவேண்டும். ஆதாரவாயிருக்கும் கடவுள், மதம், அரசன், என்பவைகள் மாத்திரமல்ல இவைகளை அனுமதித்துக்கொண்டிருக்கும் அரசாங்கமும், நீதி, ஒழுக்கம் பழக்கம், வழக்கம்முதலியனஎன்பவையையும், நாங்கள் அழித்தே தீருவோம். ராஜத்துரோகி, கடவுள் துரோகி, மதத்துரோகி, பூச்சாண்டிகள் இனி சுயமரியாதைக்காரர்களிடம் செல்லாது.

சுயமரியாதைக்காரர்களிடம் மாத்திரமல்ல, வெகு சிக்கிரத்தில் உலகத்திலேயே அவைகளுக்கு இடமில்லாமல் போகப்போகின்றது. இதுகாலவரையும் கஷ்டப்படும் மக்கள் தங்கள் தலைவிதியின்மீதும், கடவுள் மீதும், பழிபோட்டுக்கொண்டு தலைவிதியை மாற்றவும் கடவுள் தயவு பெறவும் என்று, மேலும் மேலும் கஷ்டப்பட்டுக்கொண்டே இருந்து வந்தார்கள். ஆனால் இப்போது சுயமரியாதைக்காரர்களால் — நாத்திகர்களால், கடவுள் மதத்துரோகிகளால் ஜனங்கள் உண்மையை உணர்ந்து கொண்டார்கள். இவைகள் தேசீயம் பேரிகளும், பணக்கார முதலாளிகளும் செய்யும் சூழ்ச்சியும், பித்தலாட்டமுமேயொழிய வேறல்ல என்றும். கடவுளும் மதமும் இந்த பித்தலாட்டக்காரர் கற்பனைகளே தவிர வேறு இல்லை என்பதும் உணர்ந்துகொண்டார்கள். நன்றாய் உணர்ந்துகொண்டார்கள். இப்பொழுது இவைகளை எப்படி ஒழிப்பது? என்பதில்தான் கவலையாய் இருக்கிறார்கள்.

வேகமாய்ப் போகவேண்டியபோவதற்கு தயாராய் இருக்கிற மோட்டார் காருக்கு முன்னால் பனைமரத்தைக்கொண்டுவந்து போட்டது போல், இன்று கடவுளும், மதமும், அரசாங்கமும் குறுக்கே கொண்டு வந்து போடப்பட்டு இருக்கின்றன. இவை வெகு நாளையத்த கடவுளாய் இருந்தாலென்ன? அவதார புருஷர்களால் உண்டாக்கப்பட்ட மதமாய் இருந்தாலென்ன? சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்கமாய் இருந்தால் என்ன? ஒழியவேண்டும் என்ற முடிவுக்கு வந்த பின் அவை தானாக ஏற்பட்டால் என்ன சட்டப்படி ஏற்பட்டால் என்ன? சும்மா ஏற்பட்டால் என்ன? ஒழியவேண்டுமா? வேண்டாமா? என்பதுதானே முக்கிய விஷயம்.

## பொதுநலம்.

அதுபோலவேதான் பொது நல சேவை என்பதும், மனித சமூக சமதர்மத்துக்கு விரோதமானதேயாகும். பொது நலம் என்றால் என்ன? எல்லோருக்குமே நன்மை செய்யவேண்டுமென்பதுதான் அதன் பொருளாக முடியும். கொடுமைப்படுத்துகிறகூட்டத்துக்கும் கொடுமைப்படுகின்ற கூட்டத்துக்கும் நன்மை செய்வதென்றால் அதனால் என்ன பிரயோஜனம் ஏற்படும். கஷ்டப்பட்டுப்படுகின்ற கூட்டத்துக்குத்தான் நன்மை செய்ய வேண்டும். ஆகவே நாம் ஒரு கூட்டத்தாருக்குத்தான், ஒரு வகுப்பாருக்குத்தான் நன்மை செய்கின்றவர்களாவோம். அது மற்றொரு வகுப்பாருக்கு தீமையாய்த் தோன்றலாம். நமக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. திருடனுக்கும் திருட்டுக்கொடுப்பவனுக்கும் எப்படி நன்மை செய்ய முடியும். "திருட்டுப்புத்தியை விட்டுவிடு, இல்லாவிட்டால் விட்டு விடும்படி செய்வேன்" என்பதுதான் திருடனுக்குச் செய்யும் நன்மையாகும். இதை நன்மையாகத் திருடன் மதிப்பானா? ஆதலால் நமது சேவை ஒரு நாளும் பணக்காரனுக்கும், முதலாளிக்கும் நன்மையாய் காணமுடியாது. அவர்களுக்கு இனியும் நன்மை செய்வது என்பது நமது கொள்கையுமல்ல. ஆகவே நாம் பொதுநல சேவைக்காரரல்ல. நாம் புரட்சிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுவோம். நமக்கு சீர்திருத்தக்காரர்களும், பொதுநல சேவைக்காரர்களும் பெரிய விரோதிகளேயாவார்கள். புரட்சி ஆரம்பித்த காலங்களில்தான் சீர்திருத்தங்கள், பொதுநல சேவைகள் புறப்படும். எதற்கு? புரட்சிகளை அடக்குவதற்கு. ஆகையால் நாம் எந்த வித சீர்திருத்த வாதிகளுடனும் எந்த வித பொதுநல வாதிகளுடனும் சேராமல் தனித்து நின்றே புரட்சி செய்ய வேண்டும்.

## புரட்சி.

தலை கீழாய் கவிழ்ப்பது தான் புரட்சியாகும். இதற்காக யாரும் பயப்படக்கூடாது. குழந்தைகளை பூச்சாண்டி பேர் சொல்லி மிரட்டுவது போல் நம்மையும் "புரட்சி என்று வாயில் சொல்லாதே, மனதிலும் நினையாதே, வாய் வெந்துபோகும்" என்று பலர் சொல்லுவார்கள். இனி அந்தக் கதை பலியாது. புரட்சி செய்து வெற்றி பெற்ற தேசங்களையும் மக்களையும் பார்த்து விட்டோம். நாமும் சில விஷயங்களில் புரட்சி செய்தும் பார்த்துவிட்டோம். ஜாதிப் புரட்சி செய்தோமே என்ன ஆய் விட்டது? வெற்றி மார்க்கத்தில் செல்லுகிறோமா இல்லையா? மதப்புரட்சி செய்தோமே என்ன முழுகிப் போய் விட்டது? தத்துவார்த்தம் பேசி அதைக் காப்பாற்றப் பாடுபடுகின்றார்களே ஒழிய புரட்சி செய்தவர்களுக்கு என்ன ஆபத்து வந்தது? கோவில் நுழைவுப் புரட்சி என்ன ஆய் விட்டது? இப்போது அது சட்ட சபைக்குவந்து விட்டது. கோயிலுக்குள் விடுவதற்கு மனமில்லாதவனும் கூட நம்முடன் சேர்ந்து கொண்டு கோவிந்தா போடவேண்டிய நிலைமைக்கு வந்து விட்டானா இல்லையா? அரசியல் புரட்சியும் செய்கின்றோம். அரசனே வேண்டியதில்லை என்றும் சொல்லுகின்றோம். பல தேசங்களில் இப்புரட்சிகள் வெற்றி பெற்றும் இருக்கின்றன. இவற்றை நாமும் தைரியமாய் சொல்லவும் முன்வந்து விட்டோம். என்ன ஆய் விட்டது? நம்மைப் பொருத்தவரை இந்தப் புரட்சிகளை எல்லாம் நாம் ஏன் செய்தோம். ஏழை மக்கள் கஷ்டம் நீங்கவும் பாடுபடுகின்ற மக்களை சோம்பேரிகள் ஏய்த்து அவர்களது பலன்களை எல்லாம் அடையாமல் இருக்கவும் தான் செய்தோமே ஒழிய செய்கின்றோமே ஒழிய மற்றப்படி யாரிடமாவது குரோதமோ வெறுப்போ பொறாமையோ துவேஷமோ பலவந்தமோ மனதில் வைத்துச் செய்தோமா? என்று யோசித்துப் பாருங்கள் மனிதன் என்று ஒருவன் இருப்பானேயானால் அவன் முன் மற்றொரு மனிதன் கஷ்டப்படுவதைப் பார்த்தால் எவனும் பரிதாபப்பட்டுத்தான் தீருவான். சகிக்க முடியாத கஷ்டம் வந்து விட்டால் அவனுக்கு பாபமோ, நரகமோ, சட்டமோ, நீதியோ, பழக்கமோ, வழக்கமோ ஒன்றும் எதிரில் இருக்க முடியாது.

ஆதலால் இன்றைய நிலைமையானது சகிக்க முடியாத கஷ்டத்தாலும் வேறு அநேக வழிகளில் பார்த்துப்பார்த்து முடியாததாலும் ஏற்பட்டதாகும்.

நாம் அடுத்த ஜன்மத்தை நம்பி வெகு காலம் வீணாக்கி விட்டோம். மேல்லோகத்தை நம்பி வெகுகாலம் வீணாக்கி விட்டோம். தலைவிதியை நம்பி வெகு காலம் பாழாக்கி விட்டோம், ஒழுக்கத்தையும், நியாயத்தையும், சட்டத்தையும் நம்பி வெகு காலம் நாசமாக்கி விட்டோம். இப்போதும் தேசத்தையும், தேசியத்தையும் நம்பி மறுபடியும் வெகு காலம் பாழாக்கி வருகிறோம். இவைகளை நம்புவது இவைகளுக்கு கட்டுப்படுவது இவைகளுக்காக பாடுபடுவது எல்லாம் முட்டாள்தனம் என்பதை உணர்ந்தோம் இனி மனித சமூக விடுதலைக்கும் ஒரு மனிதனை மற்றொரு மனிதன் அடக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம்செலுத்துவதைஒழிப்பதற்கும் ஒரு மனிதனின் உழைப்பை மற்றொரு மனிதன் அனுபவித்துக்கொண்டு சோம்பேரியாய் வாழ்வதை அழிப்பதற்கும் பாடுபடவேண்டும் என்றுதான் சொல்லுகின்றேன்.

இது குற்றமானால், இது பாபமானால் இந்தக் குற்றத்தையும், பாபத்தையும் குஷாலாக ஒவ்வொருவரும் செய்யவேண்டியதுதான் வரவேற்கவேண்டியது தான். ஆனால் நமது கருத்தும், செய்கையும் பரிதாபத்தை ஆதாரமாய்க்கொண்டதாகவும், குரோதத்தையும், பலாத்காரத்தையும் வெறுத்ததாகவும், இருக்க வேண்டுமேயொழிய மற்றபடி வீண் அர்த்தமற்ற ஆத்திரத்தையும், துவேஷத்தையும், முரட்டுத்தனத்தையும் குறிகொண்டதாய் இருக்கக்கூடாது என்று பேசிமுடித்தார். பிறகு தலைவர் தோழர் [illegible] செட்டியார் அவர்கள் எழுந்து முடிவுரையாகப் பேசியதாவது.

## தலைவர்.

கனவான்களே! நமது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களையும், அவரது வேலையும் உங்கள் எல்லோருக்கும் தெரியும். அவர் ஆதியில் சர்க்காருடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். பிறகு ஜாதியுடன் சண்டை போட்டார், பிறகு மதத்துடன் சண்டை போட்டார், பிறகு கடவுளுடனும் சண்டை போட்டார், இப்போது அவர் பணக்காரர்களை ஒழிக்கவேண்டும் என்கின்றார். அதைப் பார்த்து அதற்குத்தக்கபடி நடந்து கொள்ளுங்கள். பணக்காரர்கள் ஒருவர்கூட இப்போது இந்தக்கூட்டத்தின் முன்னால் காணப்படவில்லை. அப்படிச் செய்யக்கூடாது. இது யாருக்கும் நல்லது தான். இதுதான் எனது முடிவுரை என்று சொன்னார்.

பிறகு கோவை சுயமரியாதை சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைவருக்கும், மற்றவர்களுக்கும் நன்றி செலுத்தினார், பிறகு கூட்டம் கலைந்தது. உடனே 8-மணிக்கு மேல் கோவை சுயமரியாதைச் சங்க கட்டடத்திற்கு தோழர் ராமசாமியை சங்க அங்கத்தினர்களும், மற்றவர்களுமாக சுமார் 50, 60 வாலிபர்கள் அழைத்துச்சென்று அங்கு ஒரு மணி நேரம் சுற்றுப்பிரயாணத்தைப்பற்றி அநேக விஷயங்கள் பேசப்பட்டு இரவு 9-மணிக்குமேல் கூட்டம் கலைந்தது.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# குஷ்டரோகமும் சித்தமுறையும்.

(யாழ்பாணம்—செல்லையா.)

அறிவுப் பெருஞ் செல்வர்காள்!

நான் வைத்திய வித்தை பெற்ற காலந்தொட்டு, சித்த வைத்திய வித்தையில் பேரவாக்கொண்டு பல ஆன்றோரை யடுத்துத்தொண்டு புரிந்தும், பல பண்டிதர்களோடு கலந்து ஐயுறவுகளைக்களைந்தும், அனுபவசித்தமாக உயர்ந்த பல முறைகளைக்கண்டு பெரும் பொருள் செலவிட்டு பல உயர்ந்த மருந்துகளை முடித்துக் குட்ட ரோகத்தினால் துன்புறும் குறைநோயாளர்களுக்குக் கொடுத்து, அவர்கள் அம்மருந்துகளால் அடைந்த பெருங்குணங்கண்டு பெரு மகிழ்ச்சியை யடைந்தேன். பலவாண்டுகளுக்கு முன்னே நம் தமிழ் ஆன்றோர்களாகிய சித்தர்கள் தங்கள் தங்கள் அறிவின் நுட்பத்தால் அவரவர்களின் அனுபவ முறைகளை எவ்வளவு நுட்பமாகவும், சுருக்கமாகவும் நூல்களில் எழுதியிருக்கிறார்கள். சிலர் தற்காலத்தில் அவைகளை நன்குணராதும் அனுபவமுடைய பண்டிதர்களிடம் சேர்ந்து கைப்பாகமென்னும் செய்பாகத்தைக் கற்றுணராமலும், ஆயுள் வேத வைத்தியமென்று பெயரிட்டு, தமக்கும் பிறருக்கும் பெருங்கேடுகளை விளைவித்துக் கொள்வதுமன்றி அத்தகைய பெரு நூல்களுக்கும் குறைகளையுண்டாக்குகின்றனர். நமது ஆன்றோர்கள் கால நிலையையும் மனித தத்துவ நிலையையும் கண்டு பண்டிதம் செய்யுமாறு பல இடங்களில் ஒவ்வொரு முறைகளிலும் வரையப்பட்டிருக்கின்றன. சிலவற்றை காலவியல்பின்படி புதுக்கச்சேர்த்தும், சிலதை விலக்கியும் சேர்க்கும்படி கூறியிருக்கும் நுட்பத்தைத தற்கால பண்டிதர்களிற் சிலர் அறியாது முறடன் பட்ட முறைகளில் புகுந்து உபாதைப்படும் நோயாளிகளைத் துன்புறுத்துகின்றனர். ஆதியில் சித்தர்களே வைத்தியத்தில் சிறந்தவர்களென்று பலநூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. சிலருடைய தப்பெண்ணத்தால் ஆதியில் அகத்தியன்தான் வைத்தியத்தை இந்தியாவுக்கு கொண்டுவந்து பரப்பினுனென்று ஆரியர்களும் அவரைச் சேர்ந்தவர்களும் கூறுகின்றனர். ஆரியர்கள் எக்காலத்தில் இந்தியாவுக்கு வந்தார்களென்று ஆரியரைச் சேர்ந்தவர்களும், தற்கால ஆரியரும் அறியார் போலும். தமிழ் நாட்டில்வந்து குடியேறி தமிழைக் கற்றுப்பின் தமிழ்ச்சித்தர்கள் வைத்தியத்தைக் கற்றுக்கொண்ட அகத்தியன் பல பாஷையிலிருந்து பொறுக்கியெடுதத கிரந்த பாஷையில் எழுதிப்பின், ஆரியச்சூழ்ச்சியினால் தமிழ் மக்களை அடிமையாக்கினதுமன்றி நம் தமிழ் பெரியார்கள் செய்த அரிய பெரிய நூல்களையும் கிரந்த பாஷையிலிருந்தே மொழி பெயர்க்கப்பட்டதென்று கூறுகிறார்கள். அதுவுமல்லாமல் தமிழ் பாஷையை அடியோடு எடுக்க முயற்சித்தும் முடியவில்லை. இன்னும் தமிழ்பாஷையில் அருளிச் செய்திருக்கும் சித்த வைத்திய முறைகளை அழிக்கவேண்டிய முயற்சியும் எடுத்துக்கொண்டே வருகிறார்கள். சென்ற ஆண்டில் சென்னையில் ஆரிய ஆயுள்வேத வைத்திய சாலையில் நடந்த ஆரியச் சிறப்புக் கூட்டத்தில் ஆரிய வைத்திய பண்டிதர்களிற்சிலர் சித்தவைத்யத்தை துலைக்க பல சூட்சிகள் செய்தும் பயன் படவில்லை.

தமிழ் பாஷையில் அருளிச்செய்த சித்த வைத்திய நூல்களையும், முறையையும்கற்றுப்பின்கிரந்தத்தில் மொழி பெயர்த்து, ஆயுள்வேத வைத்தியமென்று பெயர் பூட்டிய தற்கால ஆரிய ஆயுள்வேத பண்டிதவித்துவான்களே! உங்கள் வைத்தியம் சிறப்புடையதெனின் குஷ்டரோகம் அதாவது அங்கத்தைக்குறைக்கும் நோய் (குறைநோய்) க்கு வைத்தியம் செய்யும் வைத்தியர்களல்லவா சிறந்த வைத்தியர்கள். ஆனபடியால் ஆரியக் கூத்துக்கள் பிரயோசனப்படாது. உங்களுடைய வைத்திய வித்தைகளையும்எங்கள் தமிழ்சித்தவைத்திய முறைகளையும், குறை நோய்களால் வருந்தும் குஷ்டரோகிகளுக்கு சிகிச்சை செய்து காட்டினாலல்லவோ எல்லா வன்மையும் தெரியும். இந்தியா முழுதும் தமிழ் பாஷையே நிறைந்திருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. பின் பார்ப்பனச்சூழ்ச்சிகளால் தமிழ் பாஷையை ஒழித்துக் கொண்டே வந்துவிட்டார்களென்பதையறிய தற்காலத்து தமிழர்களிற் சிலரே சான்று, இன்னும் சில அரிய பெரிய நூல்களை கிரந்தத்திலிருந்து மொழி பெயர்த்தெடுத்ததென்று தானே கூறுகின்றார்கள். கிரந்தப்பாஷையிலிருந்து ஒரு நூலும் தமிழ் மொழி பெயர்க்கவில்லை. ஆதியில் இவர்கள் கூறும் எந்த நூல்களும் அதாவது உண்மையான நயவஞ்சகமற்ற நூல்கள் யாவும் தமிழிலிருந்தே கிரந்தத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. ஏனெனில் தமிழில் எல்லா எழுத்துக்களுக்கும் நேர் உச்சரிப்புண்டு, சாதிக்கொரு எழுத்துத் தான் தமிழிலிருக்கிறது, கிரந்தத்தில் அப்படியல்ல. ஒவ்வொரு சாதி எழுத்திலும் நன்னான்கெழுத்துக்கள் இருக்கின்றன (கவ்வில் நாலும், சவ்வில் நாலும், டவ்வில் நாலும் தவ்வில் நாலும், பவ்வில் நாலுமாக ஒரு சாதியில் பலவெழுத்துக்களிருக்க வேண்டிய காரணம் யாது என்பதை ஊன்றிப் பார்த்தால் பல பாஷையிலிருந்து பொறுக்கியெடுத்ததென்பதை என் நம்பமுடியாது. ஒரு வேளை அப்படியிருந்த போதிலும் தற்காலம் அக்கிரந்த பாஷையெங்கேபோய்விட்டது என்பதுதான் எனது கேள்வி. தமிழ் பாஷையின் அழகும், ஓசையின் சத்தமும், சொற்களோடு எழுத்துக்கள் சேர்ந்து செல்லும் வடிவமும் வேறு எந்தப் பாஷையிலும் காணமுடியாது என்றதை எந்தப்பண்டிதர்களும் வித்துவான்களும் இல்லை யென்று மறுக்க முடியுமா?

(தொடரும்)

# கோவையார் எழுதுவது.

தனிவுடைமையைத் தகர்த்தெரிந்து பொது உடமை ஆக்குக!!

இயற்கை நியதியிலும், உணர்வினும், பிறப்பிலும், வாழ்விலும் பேதமில்லா மாந்தர் தம்முட் சோம்பர் வகுத்த நீதியில்லாச்சாதியும், மதமும், சமூகச்சட்டமும், சாஸ்திர, புராணச் சதிமோசச் செயலும் அவர்தம் ஒற்றுமை குறைந்து, வேற்றுமை விளைத்துப் பல் பிரிவாக்க, தத்தம் பிரிவாம் சாதியும, மதமும் சாலவும் பெரிதெனப்பொருது மடிந்தனர், பேதையர் அன்றிப்பொருளும் பயனும் பெரிதெனக்கவன்றிலர். சுயநலச்சோம்பர், இந்நிலையில், உடமையாவும் தமதேயாக்கிச் சூழ்வினைபுரிந்து, பிறர் தம் முதுகிவர்ந்து, ஆதிக்கங்கொண்டு அவ்வேழையருழைப்பால் ஊதியங்கண்டு, உயர்தனிச்செல்வராய் மிகைபடவாழ, உழைத்து உழைத்து இளைத்து உயிர்விடும் எமதேழைத்தோழர் உண்டியும், உடைம், உறைவிடமுமின்றித் தவித்திடர்ப் படுகின்றனர். கோடிக்கணக்கில் ஏழையர்கூழின்றிப் "பசி, பசி" யெனப் பதறிச்சாதலும், ஒரு சில சோம்பர் மிதமிஞ்சி உண்டு, சுகித்து, மருத்து வந்தேடலுமாய இந்நிலையைப்பேணவே சமூகப்பழக்கமும், சமயபோதனையும், அரசியற் சட்டமுமாயுளது. இதனை; இப்பொல்லாப்பழக்கத்தை, போதனையை, சட்டத்தை, அவை மக்கட்கிழைக்கும் கொடுமையினைக் கண்டு, கேட்டும் உணர்ந்தும் எத்துணை யாண்டுகள் வாளாவிருக்க முடியும்?

"பல்லோருழைக்கச் சில்லோர் பயன் துய்க்கும் இந்நிலையிற் புரட்சி ஓங்கவேணடும். தனிவுடமை பொன்றிப்பொதுவுடமை பொங்குதரவேண்டும்" எனப்பால் மணமருப் பாலருமெளிதில் உணருமாறேடுத்தோதி மதமென்னும் மதுவுண்டு, மயங்கியுளமாக்களின் உணர்ச்சியைத் தட்டிஎழுப்பி, அவர் தந்நிலையுணர்த்தி, தத்தமதுழைப்பின் "நிறைபயனும்" தத்தமதாக்க முனைந்துழைத்தல் வேண்டும்

"ஏழையரேனும் கோழையரல்லோம். இயற்கை நீரும், நெடுவெளியும், காற்றும் போலவே நிலனும் பொருளும் பொதுவெனத் கொள்வோம். உறுபயன் எல்லோரும் உண்டுகளிப்போம், சுகிப்போம்" என இவ்வுலகில் யாண்டும் நிகழ்தரும் ஏழையர், இளைஞர் முழக்குகின்றனர். இந்தியர் மட்டும் இவ்வுலகப் பெரும் புரட்சியில் உணர்ச்சியின்றி எங்ஙனம் உறங்கி க்கிடத்தல் சாலும்?

"மதாபிமானமும் வேண்டாம், தேசாபிமானமும் வேண்டாம். மனுஷாபிமானமே வேண்டும்"

உள்ளது கொண்டு எங்களித்திடாது ஊதியமதிகம் விரும்புதல் உலகவழக்குக்கும், மதவுணர்ச்சிக்கும் மாறுபட்ட செயலெனக்கருதிவந்த மக்களிடை, அப்போதமனைத்தும் முதலாளித்துவத்தைக் காக்கத்தோன்றிய சூழ்ச்சிச் சொல்லென விளக்கி, யாவருள்ளத்தும் தமது கேவல நிலையில் அதிருப்தியும், அமைதியின்மையும் வலுப்பெற்று, தம்மை அந்நிலையிலாழ்த்தி, முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டையாயிலங்கிடுவது கடவுளாயினும், மதமாயினும், பண்டைப் பழக்கமாயினும் சாத்திரச் சுருதியாயினும், அன்றிப் பணப்பையே யாயினும் அவற்றை ஆண்மையோடு எதிர்த்துப் புரட்சி செய்யவேண்டும்.

## குடி அரசு எங்கும் துலங்குக! முடி அரசு எங்கும் வீழ்க!!

## நான்குநேரி தாலூகா, ஆதிதிராவிட மகாஜன சங்கம்.

தாராவி பம்பாய்.

22-1-33ல் இரவு 9மணிக்கு தோழர் எ. எ. சவரிதாசன் அவர்கள் தலைமையில் நான்காவது ஆண்டு பூர்த்தி விழா நடைபெற்றது. தலைவர் பிரசங்கத்திற்கு பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது, "காருண்யந்தங்கிய கவர்மெண்டாருக்குத் தங்கள் ராசவிசுவாசத்தைத் தெரிவிக்கின்ற" தென்றும், 7-1-33ல் நடந்த நான்குநேரி தாலூகாஸ்பெஷல் மகாநாட்டில் நிறைவேறிய 8 தீர்மானங்களை ஆதரிக்கின்றதென்றும், தாராவிலுள்ள ஆதிதிராவிடர்கள் இந்த சங்கத்தில் சேர்ந்து உழைக்கவேணடுமென்றும், இலங்கையிலுள்ள ஆதிதிராவிடர்கள் ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டுமென்றும், மகாண சங்கம் நடத்த தலைவர்கள் கவனிக்கவேண்டுமென்றும், மேனாடு சுற்றுப்பிரயாணம் செய்து சுகமாக வந்த தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிற தென்றும், தீர்மானிக்கப்பட்டது.

# குடி அரசு.

ஈரோடு 1933 பிப்ரவரி மீ 5-உ


## தீண்டாமை விலக்கு இரகசியம்.

—:0:—

இது சமயம் இந்தியாவில் நடை பெற்று வரும் "தீண்டாமை விலக்கு" வேலையானது தீண்டாதாரெனக் கருதப்படும் மக்களுக்கு சமூக வாழ்வினுள்ள சகலவித கஷ்டத்தையும் ஒழிப்பதற்காக ஏற்பட்டதல்லவென்றும் அதுவெரும் இந்து மத பிரசாரத்திற்காகவே துவக்கப்பட்டு, அந்த முறையிலேயே நடந்து வருகின்றதென்றும் இதற்கு முன் பல தடவைகளில் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்.

உண்மையான தீண்டாமை விலக்கு என்பது மனித சமூக ஜீவகாருண்யத்தையும் எத்துறையிலும் சமதர்ம தத்துவத்தையும் கொண்டதே ஒழிய அது எந்தவிதமான மத சம்பந்தத்தையும் கொண்டதல்லவென்பதே நமது துணிபு. அன்றியும் அது பெரிதும் பகுத்தறிவையும், சுகாதாரத்தையும், சமதிருஷ்டியையும் மாத்திரமே கொண்டு யோசிக்கப்பட வேண்டியதே தவிர, மற்றபடி வேறு எந்த விஷயத்தையும் பற்றி கவனிக்க அதில் சிறிதும் இடமில்லை என்பதும் நமது துணிபாகும். ஆனால், இன்று நடைபெறும் தீண்டாமை விலக்கு பிரசாரம் என்ன கருத்தின் மீது என்ன ஆதாரத்தின் மீது நடைபெறுகின்றது என்பதைச் சற்று சிந்தித்துப்பாருங்கள்.

முதலாவதாக, இந்தப் பிரச்சினை இப்போது இவ்வளவு தூரம் விளம்பரப்படவும், முக்கியமானதாய்க் கருதப்படவும் ஏற்பட்ட காரணம் என்ன? என்பதை சற்று யோசிப்போம். அதாவது, சென்ற வருஷம் நடந்த சட்ட மறுப்பு மறியல் கிளர்ச்சிகளின் போது ஆங்காங்குள்ள தேசியத் தலைவர்கள் என்பவர்களை தீண்டப்படாத மக்கள் எனப்படுபவர்களும், அவர்களுக்காக வேலை செய்து வருபவர்களும் சில கேள்விகள் கேட்டதும் அதற்கு அத்தேசியத்தலைவர்கள் பதில் உரைத்ததும் யாவரும் அறிந்ததேயாகும். என்னவென்றால் "ஐயா தேசிய தலைவர்களே! தேசிய வாதிகளே!! சிறிது காலத்திற்கு முன் தீண்டாமை ஒழியாமல் இந்தியாவுக்கு சுயராஜ்யம் வராது என்றும், வந்தாலும் நிலைக்காது என்றும் சொன்னீர்களே! இப்போது தீண்டாமையைப் பற்றிய பேச்சை அடியோடு மறந்து விட்டு வேறு எதுவோ பேச்சுப் பேசுகிறீர்களே இதன் மர்மம் என்ன"? என்று கேட்ட காலத்தில் தோழர் காந்தியார் உள்பட "இப்போது தீண்டாமை என்பது அவ்வளவு முக்கியமானதல்ல, சுயராஜியமே முக்கியமானது, ஏனெனில் சுயராஜியம் வந்து விட்டால் தீண்டாமையை ஒரே ஒரு உத்தரவில் ஒழித்து விடுவோம், ஆதலால் இப்போது உப்புக் காய்ச்சுவதும், மதுவிலக்கு மறியல் செய்வதும், அன்னியத் துணி விலக்கு மறியல் செய்வதுமே தான் முக்கியமான காரியம்" என்று சொல்லி வந்ததும் அதற்கு தீண்டப்படாத மக்களும் அவர்களது அனுதாபிகளும் பதில் சொல்லுகையில்,

"தீண்டாமையை சுயராஜியம் வந்த பிறகு ஒரு உத்திரவில் ஒழித்து விடக்கூடுமானால் உப்பு வரியையும் கள்ளுக் கடைகளையும் அன்னியத்துணிகளையும் ஒரு உத்திரவில் ஒழித்து விட முடியாதா" என்று கேட்டதும் வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லும் முறையில் தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது "எந்தெந்த விஷயத்தை எவ்வெப்பொழுது கவனிப்பது என்பதான காரியங்கள் காந்தியாருடைய இஷ்டத்தைப் பொருத்ததாகையால் அதைப் பற்றி நாங்கள் ஒன்றும் பதில் சொல்லமுடியாது" என்று பதில் சொன்னதும் வாசகர்கள் அறிந்ததேயாகும்.

இப்படி இருக்க உப்புவரி நீக்கப்படாமலும், கள்ளுக்கடை எடுபடாமலும், அன்னியத்துணி நிறுத்தப்படாமலும், இருக்கும் போதும், சுயராஜ்யம் ஏற்படாமல் இருக்கும்போதும் இப்போது திடீரென்று தீண்டாமை விலக்குக்கு ஏற்பட்ட அவசரமென்ன? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள்.

தீண்டப்படாத மக்களுக்கும், அவர்களிடம் உண்மையான அனுதாபம் உள்ளவர்களுக்கும், தீண்டாமை விலக்கு விஷயத்தில் காங்கிரசினிடமும், தேசியத்தலைவர்கள் என்கின்றவர்களிடமும் இருந்த நம்பிக்கையானது அடியோடு மறைந்துபோய் அவர்கள் "புற மதஸ்தர்"களையும் அரசாங்கத்தாரையும் அடைக்கலம்புக உறுதி செய்துகொண்டு சிலர் புறமதம் புகுந்தும், அரசாங்கத்தாரிடம் தங்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் கேட்டும் அது பெறுவதற்காக புற மதஸ்தர்கள் என்பவர்களுடன் சில ஒப்பந்தம் செய்து கொண்டும் தைரியமாய் வெளிக்கிளம்பியதுடன் தீண்டாதார் தலைவர்கள் என்பவர்களும் தீண்டாதாருக்குத் தலைவர் என்றும் இந்தியர்களுக்கும் ஏக தலைவர் என்றும் சொல்லிக்கொள்ளப்பட்ட காந்தியாரையே "நீர் எங்களுக்குத் தலைவருமல்ல பிரதிநிதியுமல்ல நாங்கள் உங்களை தலைவராகவோ பிரதிநிதியாகவோ ஏற்றுக்கொள்வதில்லை" என்று லண்டன் வட்டமேஜை மகாநாட்டில் உலகோரறியக் கர்ஜனை புரிந்ததோடல்லாமல் வெகு கடுமையாகத் தாக்கி பேசியும், அதாவது காந்தியாரைப்பார்த்து "நாங்கள் ஒருவரை எங்கள் பிரதிநிதி அல்ல என்று சொன்ன பிறகும்கூட சிறிதும் வெட்கமில்லாமல் மறுபடியும், மறுபடியும் எங்கள் பிரதிநிதி என்று பாத்தியம் கொண்டாடுவது ஒழுங்கானவர்களுக்கு அழகல்ல" என்றும் சொன்னதும் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும்.

இப்படிச் சொன்ன பிறகே அரசாங்கத்தார் காந்தியார் தடுத்ததையும் லட்சியம் செய்யாமல் தீண்டாதாருக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுத்து தீண்டப்படக் கூடாதவர்களுக்கே தங்களது தீண்டாமையை நீக்கிக்கொள்ள அவகாசம் ஏற்படுத்திவிட்டதும் வாசகர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

இவ்வளவும் தவிர இந்த இரண்டு வருஷகாலத்தில் சென்னை மாகாணத்திலும், சுதேச சமஸ்தானங்களிலும் மாத்திரம் ஆயிரக்கணக்கான தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் இந்துமதம் என்பதைவிட்டு விட்டு புறமதங்களை என்பவைகளைத் தழுவிக்கொண்டதும், இந்து மதத்தில் இருந்தவர்களிலும் அநேகர் தங்களுக்கு "மதமும் வேண்டாம், கோவிலும் வேண்டாம், கடவுளும் வேண்டாம்" என்று சொன்னதும் அந்தப்படியே பலபல மகாநாடுகளில் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டதும், இந்த தீர்மானங்கள் இந்தியா தேசம் முழுவதும் அநேகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், பிரசாரங்கள் செய்யப்பட்டும், வெற்றி முரசுகள் அடிக்கப்பட்டதும் வாசகர்களுக்குத் தெரியும்.

இவ்வளவு அல்லாமல் மற்றும், ஒரு பெரிய கிளர்ச்சி அதாவது, "காங்கிரசும், தேசியமும், காந்தீயமும், பணக்காரர்களுக்கும், மேல் ஜாதிக்காரர்களுக்கும், படித்த மக்களுக்குந் தான் பிரதிநிதித்துவம் பொருந்தியதேயொழிய ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், குடியானவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்லவென்று சொல்லி, காங்கிரசு ஒழியவேண்டும், காந்தீயம் ஒழியவேண்டும், என்று காந்தியார் முன்னிலையிலேயே கோஷமிடப்பட்டு, கருப்புக்கொடி பிடித்ததும், அவருக்கே கருப்புமாலை போட்டதும் ஆகிய காரியங்களும், வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

ஆகவே இவ்வளவு காரியங்களும் நடந்தபிறகும், மற்றும் தேசியத்தலைவர்களுக்கு இதுசமயம் வேறு எந்தவிதமான கிளர்ச்சியும் முழுமுரமாய்ச் செய்ய முடியாமல் போனபிறகும்தான் "தீண்டாமை விலக்கு" —"ஹரிஜன சேவை" —"கோவில் பிரவேசம்" ஆகிய காரியங்கள் தாண்டவமாடுகின்றன. அதுவும் எதற்காக என்றால் மதத்துக்காக என்றும், அதிலும் இந்துக்கள்தான் இதில் ஈடுபடவேண்டும் என்றும் இது கலப்பற்ற மதப்பிரசாரமே என்று பெயரிட்டும், வரையறுத்தும் கிளர்ச்சிகள் செய்யப்படுகின்றன.

பிரசார முறைகள் எப்படியிருக்கின்றன? என்று பார்த்தாலோ அவை தீண்டாமைக்கு மதத்தில் ஆதாரமில்லை என்று ஒருவர் சொல்லுவதும், தீண்டாமைக்கு மதத்தில் ஆதாரமிருக்கின்றது என்று மற்றவர்கள் சொல்லுவதும், தீண்டாமை ஒழிந்தால் ஜாதி முறை கெட்டுப்போகும் என்று ஒருவர் சொல்லுவதும், தீண்டாமை ஒழிந்தால் ஜாதி முறை கெடாது என்று மற்றவர் சொல்லுவதும், தீண்டாமை ஒழிந்தால் வருணாச்சிரம முறை ஒழிந்துவிடும் என்று ஒருவர் சொல்லுவதும் தீண்டாமை ஒழிந்தால் வருணாச்சிரம முறை அழியாது என்று ஒருவர் சொல்லுவதும், தீண்டாமை பாராட்டாவிட்டால் கோவில்களின் பரிசுத்தத்தன்மை கெட்டு விடும் என்று ஒருவர் சொல்லுவதும், பரிசுத்தத்தன்மை கெட்டு விட்டால் சுத்தம் செய்து கொள்ளலாம் என்று மற்றவர்கள் சொல்லுவதும், இன்னும் இதுபோன்ற பிற்போக்கான முறைகளில் தான் பிரசாரங்

கள் நடைபெற்று வருகின்றன.

தோழர் காந்தியவர்களை மாடு தின்பவர்கள் கோவிலுக்குள் பிரவேசிக்கத் தகுதியற்றவர்கள் என்றும் தீண்டாதவர்கள் கோவிலுக்குள் சென்று வந்த பிறகு கோவிலை சுத்தி செய்யவேண்டுமென்பதை அனுமதித்தும் ஜாதி முறைகளையும் வருணாச்சிரம பிரிவுகளையும், தொழில்களையும் ஆதரித்தும் பேசி அவைகளைப் பலப்படுத்தி வருவதும் யாவரும் அறிந்ததே தவிர மற்றபடி யாரும் இதைகற்பித்துச் சொல்லுவதல்ல.

மற்றும் தீண்டாமை ஒழிக்க சட்டம் செய்ய இந்திய சட்ட சபையில் மசோதா கொண்டுவந்து விளம்பரம் பெற்ற தோழர் சி. எஸ். ரங்கையர் அவர்களுக்கும் தன்னுடைய மசோதாவால் வருணாச்சிரம முறையும், ஜாதி பாகுபாடு முறையும் கெடாத வாறு பார்த்துக்கொள்ளுவதாக டில்லி தீண்டாதார் மகாநாட்டுத் தலைமை உரையில் சொல்லியிருக்கிறார். இதுவும் இவ்வார தினசரிகளில் காணப்படுகின்றனவேயொழிய நாமாகக் கற்பித்துக்கூறுபவையல்ல.

மற்றும் தோழர் பண்டிதமாளவியா அவர்கள் தமது தீண்டாமை விலக்குத் திட்டத்தில் தீண்டாதார்களுக்குப் பூணூல் போட வேண்டுமென்றும், பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்றும், பழைய மாமிசம் மாட்டு மாமிசம் சாப்பிடக்கூடாதென்றும், சாராயம் குடிக்கக்கூடாது என்றும், துளசி மாலை அஷ்டாக்ஷர மந்திரம் அல்லது ருத்திராக்ஷபஞ்சாட்சரமந்திரம் ஆகியஏதாவதொரு மந்திரமும், தீக்ஷையும் பெற்று இருக்கவேண்டுமென்றும், ஸ்நானம், ஜபம், தபம் முதலியவைகள் செய்யவேண்டுமென்றும், இவைகளுக்குக் கட்டுப்பட்டு தீண்டாதார்களுக்கு ஆலயப்பிரவேசம் கொடுக்கலாமென்றும், திட்டம் போட்டிருக்கிறார்கள்.

மற்றும், தோழர் ராஜகோபாலாச்சாரியாருடைய தீண்டாமை பிரசாரத்திலும் "நந்தன்" "திருப்பாணன்" ஆகியவர்களின் உதாரணத்தைச் சொல்லி அவர்கள் கோயில் பிரவேசம் பெற்ற நிபந்தனையைக்காட்டி பிரசாரம் செய்வதுமான முறையிலேயே தீண்டாமை விலக்கும் ஹரிஜன சேவையும் கோயில் பிரவேசக் கிளர்ச்சியும் நடைபெறுகின்றன. இவைகளை நன்றாய் கூர்ந்து யோசித்துப் பார்த்தால், இந்த சேவைகளிலும், கிளர்ச்சிகளிலும் உண்மையான தீண்டாமை விலக்கு என்பதின் வாசனையாவது காணப்படுகின்றதா என்று கேட்கின்றோம்.

சுயமரியாதைக்காரர்கள் தீண்டாமை விலக்கு கிளர்ச்சியில் காங்கிரசுக்காரருடன் சேர்ந்து ஒத்துழைக்கவில்லை என்று சில இடங்களில் காங்கிரசுக் காரர்களாலும் பாமரமக்களாலும் பழிகூறப்பட்டு வருவதாகத் தெரிய வருகின்றது. உண்மையான-நாணயமான தீண்டாமைவிலக்குக்காரர்களுக்கு இந்த மாதிரியான மேல் கண்ட சூட்சிக் கிளர்ச்சியில் சேர மனம் வருமா என்பதை சற்று நிதானமாய் யோசித்துப் பார்க்கும்படியாய் வேண்டுகின்றோம். ஒரு மனிதனை ஒரு மனிதன் தீண்டக்கூடாது என்பதற்கு என்ன காரணம்? என்று கேட்டு அதற்கு தகுந்த நியாயத்தை எடுத்துச் சொல்லுவதை விட்டு விட்டு வருணாச்சிரமம் ஜாதி முறை மாட்டு மாமிசம், பஞ்சாட்சரம், அஷ்டாச்சரம் நந்தன் பாணன் ஆகிய பேச்சுகளும் நிர்ப்பந்தங்களும் நிபந்தனைகளும் ஏன் பேசப்பட வேண்டும்? என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இதுசமய சந்தர்ப்பம்கிடைத்த போதெல்லாம் மதத்தையும் ஜாதியையும் காப்பாற்றும் வேலையைச் செய்வது என்கின்ற சூட்சியே தவிர மற்றபடி இதில் உள்ள நாணயமோ நன்மையோ என்ன-இருக்கின்றது? மதங்களால், ஜாதிகளால் நாட்டிற்கும் மனித சமூகத்திற்கும் ஏற்பட்ட கெடுதிகளை உணர்ந்து அவைகளை ஒழித்து மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கருதியிருக்கின்ற மக்கள் இந்த சூட்சிக் கிளர்ச்சியில் சேர முடியுமா என்பதை மறுபடியும் யோசியுங்கள்.

உலக நடப்புக்கு சமூக வாழ்க்கைக்கு ஏதாவது ஒரு கொள்கையோ திட்டமோ வேண்டாமா என்றால், வேண்டும் என்றே நாமும் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால் அது எல்லோருக்கும் சமமாய் இருக்க வேண்டும் என்று தான் சொல்லுகின்றோம்.

ஆகவே, மேற்கண்ட எல்லோருக்கும் சமமான திட்டம் என்பது இந்தத் தீண்டாமை விலக்கு கோவில் பிரவேசக்கிளர்ச்சி ஹரிஜன சேவை ஆகியவைகளில் கடுகளவாவது இருக்கின்றதா என்பதை சிந்தித்துப்பாருங்கள்.

மேலும் இன்று நடக்கும்மேல் கண்ட கிளர்ச்சிகள் எதற்காக, எதுவரை நடக்கப்போகின்றது என்பதை சற்று கவனித்தோமானால் உண்மை விளங்கிவிடும். அதாவது தீண்டப்படாத மக்களின் தனித்தொகுதி வாயில் மண்ணைப்போடவும் (போட்டாய் விட்டது) மற்றும் இந்த முடிவு (ராஜிமுடிவு) ஆட்சேபிக்கப்படாமல் சட்ட மூலமாய் உறுதிப்பட்டு வெளியாகும்வரை தீண்டப்படாத மக்களுக்கு ஏதோ பிரமாதமான நன்மைகள் செய்யப்போவதாகக்காட்டவும், அவர்கள் தங்கள் தனிப்பிரதிநிதித்துவம் போய்விட்டதை ஞாபகத்துக்கு கொண்டுவந்து கவலைப்படாமல் இருக்கவும், ஆனகாரியங்களுக்காகவே இவை நடைபெறுகின்றன. அன்றியும் அரசியல் சீர்திருத்த சம்பந்தமாய் காங்கிரசின் கூப்பாடுகளுக்கு விரோதமாய் மகமதியர்களோ, கிறிஸ்துவர்களோ, தீண்டப்படாதார்களோ, தட்டிப்பேசாமல் இருப்பதற்காக சர்வ கட்சி மகாநாடு, இந்து முஸ்லீம் மகாநாடு, தீண்டாமை விலக்கு வேலை ஆகியவைகள் மூலம் அழுத்தி வைக்கவும், ஆனகாரியங்களுக்கே இவைநடைபெருகின்றன. அரசியல் சீர்திருத்தம் என்பது வெளியாகி அது உறுதியானவுடன் "கையை வீள பார்ப்போம்" என்று இந்த காங்கிரசுக்காரரும், மேல்ஜாதிக்காரரும் சொல்லப்போகின்றார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆகையால் மதமும், ஜாதியும், மனிதசமூக முன்னேற்றத்திற்கும், ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும் விரோதமாய் இருக்கின்றன என்று கருதியவர்கள் எவரும் இன்றைய தீண்டாமை விலக்குக்கும், மதநடுநிலைமைக்கும், மத ஒற்றுமை மகாநாட்டிற்கும் சிறிதும் சம்மந்தம்வைத்துக்கொள்ளமுடியாத நிலைமையிலேயே இருக்கிறார்கள் என்பதோடு மாத்திரமல்லாமல் அதன் உள் அந்தரங்கங்களையும், அவற்றின் பலாபலன்களையும் வெளியில் எடுத்துச்சொல்ல வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள்.

---

## வருந்துகிறோம்.

சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டு சதா உழைத்துவரும் மாயவரம் தோழர் சி. நடராஜன் அவர்களது அருமைத்தாயாரும் நாளது 1—2—33 தேதி காலை மரணமடைந்த சேதி கேட்டு வருந்துகிறோம். சென்ற 7, 8 மாதங்களுக்கு முன்புதான் தோழர் நடராஜனது தந்தையாரும், அவரது சகோதரியும் காலஞ்சென்றார்கள். அம்மையாரவர்கள் அன்று முதல் தனது கணவன் இறந்த துக்கத்தாலும், குமாரத்தி இறந்த துக்கத்தாலும் ஆழ்ந்தவராகி அதே கவலையாய் இருந்து இம்மாதம் முதல் தேதி காலமாகிவிட்டார். இதெல்லாம் அதிசயமற்ற காரியமாயினும், இயற்கையேயாயினும் தந்தையையும், தாயையும் 8 மாத காலத்தில் பரி கொடுக்க நேர்ந்த தோழர் நடராஜனவர்களைப்பற்றியும், அவரது இளைய சகோதரராகிய சப்ரிஜிஸ்டரார் தோழர். சி. சுப்பையா பி. ஏ. அவர்களைப்பற்றியும் அனுதாபப்படாமல் எவரும் இரார். அம்மையாரவர்கள் கடைசிவரையிலும் மாயவரம் செல்லும் சுயமரியாதைத் தொண்டர்களுக்கும், அன்பர்களுக்கும் பொங்கிப் போடுவதில் சிறிதும் சலிப்பில்லாமல் சந்தோஷத்துடனேயே உபசரிப்பார்கள். பெரும்பான்மையான தொண்டர்களுக்கு மாதக்கணக்காய் இளைப்பாறுவதற்கு மாயவரம் தோழர் நடராஜன் அவர்கள் வீடு ஏற்றதாய் இருந்துவந்ததற்கும்காரணம் இந்தஅம்மையாரின் அன்புநிறைந்தஉபசாரமேயாகும். அப்படிப்பட்ட அம்மையார் காலமானதானது மிகவும் விசனிக்கத்தக்கதாகும்.

தோழர்கள் நடராஜனும், சுப்பையாவும், அவர்களது சிறிய தந்தையார் முத்தையாவும் இயற்கையை செவ்வனே உணர்ந்த ஞானவான்களானதால் அவர்களுக்கு உலக வழக்கப்படியான ஆறுதல் தேவையில்லை என்றே கருதுகிறோம்.

---

## "காந்தியின் மிரட்டல்."

காந்தியவர்கள் 'உயிர்விடுகிறேன்! உயிர் விடுகிறேன்' என்று சர்க்காரைமிரட்டலாம், தாழ்த்தப்பட்ட வகுப்பாராகிய தீண்டப்படாதார் என்பவர்களை மிரட்டலாம், ஆனால், பார்ப்பனர்களை மாத்திரம் மிரட்ட முடியாது. ஏனென்றால்இந்த 'மகாத்மா' உயிர்விட்டால் அவருக்குசமாதி கட்டி. குருபூஜை, உற்சவம் செய்யச் செய்து விட்டு அதன் பேராலும் பலருக்கு பிழைப்பு ஏற்படுத்திக் கொண்டு மற்றொரு மகாத்மாவையும்சிருஷ்டி செய்து கொள்ள அவர்களால்முடியும், ஆதலால் காந்தி மிரட்டல் பார்ப்பனர்களிடம் மாத்திரம் செல்லாது. ஆகையால் காந்தி

மகாத்மா பட்டம் நிலைக்கவேண்டு மானால் ஹரிஜன சேவையை விட்டு விட்டு "மதத்திற்காகத் தான் சுயராஜியம் கேட்கின்றேன்." என்று உப்புக்காய்ச்சும் வேலைக்கோ, ராட்டினம் சுத்தும்படி செய்யும் வேலைக்கோ, ஏழைகள் பணக்காரர்களைப் பார்த்து பொறாமைப்படக் கூடாது என்ற உபதேசம் செய்யும் வேலைக்கோ திரும்புவது தான் நல்ல யோசனையாகும். இல்லாவிட்டால் எப்படியாவது ராஜி செய்துகொள்ளுவது எல்லா வற்றையும் விட நல்லதாகும்.

---

## உள்ள கோவில்கள் போறாதா?

—:0:—

இன்று இந்தியாவில் பத்து லட்சக்கணக்கான கோவில்கள் இருக்கின்றன. அவைகளில் வே கம்புட்டிச்சுவர்களாகமாறி கழுதைகள் போய்நுழைவதற்குக்கூட லாயக்கில்லாத நிலையில் இருக்கின்றன. இனிஇருக்கவும்போகின்றன. இப்படி இருக்கையில் கல்கத்தாவில் புதிதாக ஒண்ணரை லட்சம் ரூபாய் செலவு செய்து ஓர் புதுக்கோவில் கட்டி அதில் ஆதிதிராவிடர்களை அனுமதித்திருக்கிறார்களாம். இதை தேசியப்பத்திரிகைகள் போற்றுகின்றன. இதுஎன்னஅக்கிரமம்?எவ்வளவு முட்டாள்தனம்? என்பதையே சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம். பழைய கோவில்களில் ஆதித்ராவிடர்களை விடவில்லையானால் அதற்காக புதுக்கோவில்கள் கட்டுவது பித்தலாட்டமான காரியமா? அல்லவா? தீண்டப்படாதவர்களுக்குக்கோவில் பிரவேசம் மறுப்பது உயர்வு தாழ்வு பேதத்தைக்காட்டுவதாய் இருக்கின்றதே என்று சொன்னால் அதற்குபதில் புதுக்கோவில்கட்டி அவர்களுக்கு ப்பிரவேசமளித்துவிட்டால் உயர்வு தாழ்வு ஜாதிவித்தியாசம் ஒழிந்துவிடுமா என்று கேள்க்கின்றோம் தேசியம் என்ற பித்தலாட்ட சூழ்ச்சி என்று ஆரம்பமானதோ அன்று முதல் இன்று வரை தேசியத்தலைவர் முதல், வாலர்கள் வரையில் ஒவ்வொரு விஷயத்திலும் இந்தமாதிரியான சூழ்ச்சிகளும், பித்தலாட்டங்களுமே நடைபெற்று மகளையும் முழுமுட்டாள்களாக்குகின்றது. என்றுதான் இந்த புரட்டுகளும், கேடுகளும் ஒழியுமோ!

---

## கோவையில் சீர்திருத்த திருமணம்.

கோயமுத்தூர் அருந்ததியார் என்னும் குலத்தவரான பூட்ஸ் வியாபாரம் செய்யும் தோழர்எம். சின்னு ... அவர்களுக்கு ... ராஜு அவர்கள் ... சிகாமணிக்கும் தோழர் மடப்பள்ளி அவர்கள் குமாரர் சென்னப்பா வுக்கும்30-1-33ந்தேதி, கோவை, குடியனூர் ரஸ்தாவில் தோழர் ஈ. வெ. ராமசாமி தலைமையில் திருமணம் நடந்தது.

திருமணத்துக்கு கோவை பிரமுகர்கள் தோழர்கள் வி. ... செட்டியார், வக்கீல் ... செட்டியார் பி. ஏ. பி. ... முனிசிபல் வைஸ் சேர்மன் ஆர். கே. வெங்கிடசாமி நாயுடு, டிஸ்டிரிக்ட் போர்டு வைஸ் பிரசிடெண்ட் எஸ். என். பொன்னையா, கவுன்சிலர் நஞ்சையா, எ. ஆர். சி... ... அ. ராகவன், ... ஆறுமுகலிங்கம் செட்டியார் கே. சுப்பிரி, சிவன், ராமசாமிமுதலியார், முதலியவர்களும் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் அனேகரும் வந்திருந்தார்கள் திருமணம் என்பது பற்றி தலைமை வகித்த தோழர் ... அரைமணி நேரம் பேசினார். திருமண மோதிரங்கள் மாலைகள் மாற்றப்பட்டு தாலியும் கட்டப்பட்டு வேறு எவ்வித சடங்கும் இல்லாமல் நடந்தது.

காலையில் சமபந்தி சிற்றுண்டி ... சுயமரியாதை தோழர் ... சமபந்தி போஜனம் ... நடந்தது. தோழர் ... எல்லோருக்கும் நன்றி செலுத்தினர்.

---


## The Rational Books Publishing Society Ltd.

பகுத்தறிவு நூல் பதிப்புக் கழகம் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

——:0:——

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி நிறுவிய இக்கழகம் அறிவியல் நூற்கள் பல எழுதியும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூற்களையும் விஞ்ஞான நூற்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடுவதுடன் தமிழிலுள்ள அறிவியல் நூற்களை ஏனைய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கையையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதியைத் தோன்றச்செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்குமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10க்கு ரூ 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு: ... அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,

காரியதரிசி, பகுத்தறிவு நூல் பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.


---

## சபாஷ் தொண்டர்கள்.

சங்கராச்சாரியாருக்கு கருப்புக்கொடி.

ஸ்ரீ சங்கராச்சாரியார் ராயபுரம் வருவதாயிருப்பதால், வைதிகர்களுக்கு விரோதமான சென்னைவாசிகளுணர்ச்சியை வெளிப்படுத்த ராயபுரம் மன்னார்சாமி கோவில்வீதியில் பல வீடுகளிலும் கம்பங்களிலும் கருப்புக் கொடிகளும், கருப்பு தோரணங்களும் கட்டப்பட்டு அட்டைகளில் "தீண்டாமை ஒழிக" "மகாத்மா காந்தி வாழ்க" "வஞ்சகமாய் பணம் பறித்து ஒரு இனத்தைச் சார்ந்த ஒரு சாரார்க்கு வயிற்றை நிரப்பும் சங்கராச்சாரியே திரும்பிப்போ" என்று எழுதி தொங்க விட்டிருந்தார்கள். சங்கராச்சாரியார் ஊர்வலம் வரும்போது 20 பேர் கருப்புக்கொடிகளுடன் அணிவகுத்து, "ஆலயப்பிரவேசத்துக்கு முட்டுக்கட்டை போடும்,வைதீக கோஷ்டியினருக்கு திரைமறைவிலிருந்துக் கொண்டு தூண்டி விட்டு உதவி புரிந்து கொண்டிருக்கும் சங்கராச்சாரியே திரும்பிப்போ" என்று கோஷஞ் செய்து சென்றனர். அவர்களில் ஸ்ரீமான்கள் கே. தக்ஷிணாமூர்த்தி நாயகர், சி. ஆர். புருஷோத்தம நாயகர், ஏ. பெருமாள்தாஸ், கே. கருப்பணசாமி நாயகர், எம். துரைசாமி ஆகிய அறுவரையும் போலீசார்கைது செய்து இரவெல்லாம் காவலில் வைத்திருந்து இன்று காலை 6-30 மணிக்கு விடுவித்தனர்.

"தமிழ் நாடு"

---

## சென்னிமலை.

சென்னிமலை யூனியன் போர்டு சபையாரால் 9-2-33 தேதி காலையில் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களுக்கு சபையின் சார்பாய் ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்தளிக்கப்படும். அன்று மாலையில் ஒரு பொதுக்கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என காரியதரிசி எழுதுகிறார்,

---

## காஞ்சிபுரத்தில் சுயமரியாதைப் பிரசாரம்.

1-2-33 தேதி முதல் 3-2-33க் தேதிவரை காஞ்சிபுரத்தில் பல இடங்களில்சுயமரியாதைக்கூட்டங்கள் கூட்டப்பட்டன. அவற்றில் தோழர்கள் எம். சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலனார், எஸ். வி. லிங்கம், சுப. சுப்பையாமுதலியவர்கள் "சுயமரியாதை" "சமதர்மம்" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினார்கள். கூட்டங்களுக்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். (... வருகிறார்).

(ஒரு நிருபர்)

## கோலாலம்பூர்

### இந்திய சுயமரியாதைச்சங்கம்.

15-1-33-உ தோழர் மா. செ. பரிமணம் அவர்கள் தலைமையில் மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள். எஸ். ஏசுதாஸ் அவர்களையும், தி. அப்புக்குட்டி அவர்களையும் சங்கத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின், தோழர்கள் அ. சுப்பிரமணியம், பி. பிச்சைமுத்து, ஆ. கந்தவேல், சு முனுசாமி, அ. சுப்பையா, வ கா. ஆண்டியப்பா, கா. ராஜகோபால், வீ. குப்புசாமி ஆகிய இவர்கள் முறையே "செய்வினை என்றால் என்ன?" "ஆலய மூடநம்பிக்கை" "சாம்பலைப் பூசும் சன்யாச பக்தர்கள்" "வாலிபர்களின் விடா முயற்சி" "சாமியாரின் போலித்தனம்" "மூடச்சடங்கும் முட்டாள் செய்கையும்" "சுகாதாரம்" "ஆரியரும் வருணபேதமும்" என்பது பற்றி பேசினார்கள் என காரியதரிசி சி. வீ. குப்புசாமி எழுதுகிறார்.

## அதிவேகமான மோட்டார்

தோழர் சர். மெல்காம் காம்பெல் "புளுபர்ட்" மோட்டாரில் சென்ற வருடம் பந்தயத்தில் 253-மைல் வேகம் சென்றார். இந்த வருடம் அதை விட வேகமாகச்செல்ல அமெரிக்கா செல்லுகின்றார். "தமிழ்நாடு"

## சென்னை சட்டசபை உபதேர்தல்.

சென்னை சட்டசபையில் கிருஸ்தவ அங்கத்தினராக விருந்து காலஞ்சென்ற தோழர் ஆரோக்கியசாமி ஸ்தானத்திற்கு தோழர் ஜியார்ஜ் ஜோசப் அவர்கள் அபேட்சகராக நிற்பதாகத் தெரிகிறது

## திருச்சி தத்தோலிங்கர்.

திருச்சி பீமநகர் மார்சக்பேட்டை அந்தோணிசாமி கோவில் அருகில் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. சுமார் 1000-பேர்களுக்குமேல் விஜயம் செய்திருந்தார்கள் கூட்டத்திற்கு தோழர் ராமசுப்பிரமணியம் தலைமை வகித்து தீண்டாமை விலக்கைப்பற்றி பேசினார். தோழர்கள் எஸ். நீலாவதி கே. வி. அழகிரிசாமி, ஆர். மருதையா ஞண்ட்ஸ் இவர்களும் தீண்டாமைவிலக்கைப்பற்றி பேசினார்கள்.

## திருத்தம்.

இவ்வாரக் "குடி அரசு" முதல்பக்கத்தில் "லெனினும்-மதமும்" என்ற 100-பக்கங்கள் கொண்ட புத்தகம் விலை அணா 6 என்றிருப்பதை அணா 4 என்பதாகவும், குடி அரசு சந்தாதாரர்களுக்கும, சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணா 4-என்றிருப்பதை அணா 3-என்றும் திருத்தி வாசிக்க வேண்டுகிறோம். (ப—ர்.)

## திருச்செங்கோடு.

### உண்மை நாடுவோர் சங்கம்.

2-2-33-உ உண்மை நாடுவோர் சங்கத்தின் கூட்டமொன்று கூடப்பட்டது தோழர் மூ. விஸ்வநாதன் தலைவராகவும், தோழர்கள் பி. கே. பழனியப்பன் எஸ். கே. வரதராஜலு காரியதரிசிகளாகவும், மற்ற 7-நிர்வாகக்கமிட்டி மெம்பர்களையும் தேர்ந்தெடுக்கப்பட்டு இச்சங்கத்தை ஈரோடு "சுயமரியாதை" சங்கத்துடன் இணைப்பதென தீர்மானிக்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது (ஒரு நிருபர்)

## மதுரை.

### சுயமரியாதைச்சங்கம்.

29-1-33 பகல் 1-மணிக்கு மதுரை சுயமரியாதை சங்கத்தினுதாரவில் ஒரு சமபந்தி போஜனம் நடைபெற்றது. அதில் எல்லாமக்களும் சுமார் 150பேர் கலந்து கொண்டார்கள் ஒரு நிருபர்

## மரணம்.

மாயவரம் தோழர். சி. நடராஜன் அவர்களது தாயார் 1-2-33ந் தேதி காலையில் மரணமடைந்தார். ஒரு நிருபர்.

## உரிகம்.

சுயமரியாதைத் தோழர் கங்காதரம் அவர்கள் 27 வது வயதில் 21-12-32-உ உடல் நலமின்றி இறந்து விட்டார். அவரது தந்தையார் பெரிய கடவுள் பக்தர். தம் அருமைக்குமாரனைக் கடவுள் காப்பாற்றவில்லை என்று தம் வீட்டிலிருந்த, முருகன், கிருஷ்ணன், படங்களையும், ஜபமணிகளையும் உடைத்தெறிந்து விட்டார். ஒரு நிருபர்

## வேண்டுகோள்.

முந்திய வாரங்களில் நமது வேண்டுகோளின்படி தெரிவிக்கப்பட்ட சுயமரியாதைக்கிளைச்சங்கங்கள் 70. அதற்குப்பின் வந்த சங்கங்கள் பின்வருமாறு:—

71. திருவசலூர், 72. செந்தாமரைக்கண், 73. சித்தோடு, 74. திருப்பத்தூர், 75. ஆலங்குடி. 76. வாணியம்பாடி, 77 மலாக்கா, 78. தென்னம்பட்டி, 79. தேவதானம்; 80. தொப்பக்குளம், 81. பெரியகுளம், 82. நந்தம்பாக்கம், 83. நாகர் கோவில், 84 திருச்செங்கோடு (உண்மை நாடுவோர் சங்கம்)

மற்றுமுள்ள சங்கங்களையும், புதுப்பிக்கப்பட்ட சங்கங்களையும், நிர்வாக சபை அங்கத்தினர்கள் பெயர்களையும் சீக்கிரம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

## பொய்! பொய்!! முழுப்பொய்!!!

### ஒரு மறுப்பு.

6-1-33 வெள்ளிக்கிழமை வெளியான "தாருல் இஸ்லாம்" பத்திரிக்கையின் 21ம் பக்கத்தில் எஸ். சி. ஆண்டி என்பார் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டிப் பதற்காக கோட்டாற்றில் 29-12-32ல் ஒருபொதுக்கூட்டம் நடை பெற்றதாகவும், அதற்கு தோழர் ஆர். மாடசாமி அவர்கள் தலைமை வைத்துயாங்கள் சுயமரியாதை இயக்கத்தை கண்டித்து "தாருல் இஸ்லாம்" போன்ற பத்திரிக்கைகளை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியதாகவும், எழுதியிருகிறார் அது முழுப்பொய் பென்று கோட்டாறு சுயமரியாதைத் தோழர்கள் எழுதுகின்றார்கள்,

## ஆசாரிபட்டி

### சுயமரியாதை வாலிபர் சங்கம்.

15-1-33-ல் போர்டு ஆரம்பபாடசாலையில் எஸ். வி. அக்கினிமுத்து அவர்கள் தலைமையின் கீழ்கூடியது. அச்சமயம், தலைவரவர்கள் "சுயமரியாதை இயக்கமும், நமது கடமையும்" என்பதைப்பற்றி பேசியபின்கூட்டம் கலைந்தது. (ஒரு நிருபர்)

## சுயமரியாதைத்திருமணம்.

8-2-33உ காலை 10மணிக்கு கும்பகோணம் தோழர் டி. எஸ். கோவிந்தசாமி அவர்களின் குமாரத்தி தோழர் பாப்பாத்தி அம்மாள் அவர்கட்கும், கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களின் கிறிய தந்தையார் குமாரர் தோழர் ஷண்முகம் அவர்கட்கும் சுயமரியாதைத் திருமணம் நடைபெறும் (ஒரு நிருபர்.)

## சுயமரியாதை வெற்றி.

மதுரை சுயமரியாதை சங்கநிர்வாகசபை மெம்பரும், நாடார் மகாஜன சங்க காரியதரிசிகளிலொருவருமான தோழர் ஆ. அ. ஆறுமுகம் அவர்கள் மதுரை நகரசபைக்கு 13-வது வார்டுக்கு சுயமரியாதை சமதர்ம கட்சியின் பிரதிநிதியாகபோட்டியன்னியில் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்இவர். ஷை கட்சியின் வேலைத்திட்ட உறுதிமொழிப்பத்திரத்தில் கையொப்ப மிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒரு நிருபர்)

## காலண்டர்கள் வரப்பெற்றோம்.

1933ளு காலண்டர்கள் கீழ்கண்டவிடங்களிலிருந்து வரப்பெற்றோம். அவைகள் மிகவும் அழகாக விருக்கிறது. அவர்களுக்கு நமது மனமுவந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சென்னை ஈார்த்தன் கம்பெனி.

மதுரை வெங்கலப் பாத்திர வியாபாரி, தோழர் பெ. சி. சிதம்பர நாடார்.

மதுரை ஆர்வே மில்கம்பெனி.

ஈரோடு கிருஷ்ணா பிரஸ்.

வேதம்பட்டி புதுக்கோட்டைஸ்டேட் அ. நா. அரு. நாகப்பசெட்டியார்.

சேலம் பீடிக்கம்பெனி சையத் அமீர் சாகிப் முதலியவர்களாகும்.

## சுயமரியாதை

### இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் 1 ஈ. வெ. ராமசாமி, 2 ஊ. பு. அ. சௌந்திரபாண்டியம், 3 ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யம், 6. ஈ. வெ. ராகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம் 8 சிவகாமி, சிதம்பரனார் 9. குருசாமி-குஞ்சிதம், 10. நீலாவதி—ராமசுப்பிரமணியம் 11. பொன்னம்பலம், 12. சிவானந்தம், 13. அருணகிரி சுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் $6\frac{1}{2} \times 4\frac{3}{4}$ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ ரா. $8\frac{1}{2} \times 6\frac{1}{2}$ 1-க்கு 1—0—0. மொத்தமாய்வாங்கு கிறவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் $8\frac{1}{2}$ - $6\frac{1}{2}$ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பனைக்காரத்தெரு,
ஈரோடு

## மதிப்புரைகள்.

### சமதர்ம கும்மி.

சமதர்மக்கும்மி என்னும் ஒரு சிறு கும்மி புஸ்தகம் சென்னை தோழர் மதுரகவி வி. வி. முருகேச பாகவதரால் பாடி பிரசுரிக்கப்பட்டது கிடைத்தது. அதில் தீண்டாமையின் மடமையைப் பற்றி விசேஷக்கருத்துடன் பல பாட்டுகள் இருக்கின்றன. விலை 0—1—0. விலாசம்,

பி. வரதராஜ பாகவதர்,
வேணுகோபால் தெரு,
பெரம்பூர் போஸ்ட்,
(சென்னை)

### ஹிந்திபாஷா போதினி.

ஹிந்தி பாஷாபோதினி என்னும் சிறு புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்தது. இது தோழர் வெள்ளறம் கே. நாட்டார் அவர்களால் இயற்றப்பட்டது. ஹிந்தி கற்பவருக்கு மிகவும் அனுகூலமானது. இதில் ஹிந்திபேச சௌகரியமான சந்திகாலம் முதலிய சில இலக்கணக்குறிப்புகள் விளக்கமாக இருக்கின்றன. விலை அணு 0—4—0. விலாசம்,

கே. நாடார்,
வெள்ளறம்,
ஒட்டப்பிடாரம் போஸ்ட்,
திருநெல்வேலி ஜில்லா.

### தொழிலாளர் துயரமும், உலக நெருக்கடியும்.

"தொழிலாளர் துயரமும், உலக நெருக்கடியும்" என்னும் சிறு புத்தகம் ஒன்று சென்னை சுதேசமித்திரன் அச்சுத் தொழிலாளர் சங்கத்து ஆறுவது ஆண்டு விழாவில் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவு நமது பார்வைக்கு வந்தது. இது ஒவ்வொரு தொழிலாளியும், சமதர்ம வாதியும் வாசிக்கத்தக்கது. விலை பைசா 0—0—6. விலாசம்

எம். சிங்காரவேலு,
22. சௌத் பீச்ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

## தென்னம்பட்டி.

30-1-33ல் தென்னம்பட்டியில் சுயமரியாதை வாலிபர் சங்கம் திறப்பு விழா தோழர் ந. சு. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் தோழர்கள் கோ. பாண்டியன், மா. வேலாயுதம், டி. குப்புசாமி எல். வேலப்பன், எஸ். வீரபத்திரன் தேவதாஸ் முதலியவர்கள் முறையே "கல்வி" "மக்களின் ஒற்றுமை" அறிவு "மதமும் மக்களும்" என்பது பற்றி பேசினார்கள்.

ஈரோட்டில் நடைபெற்ற வேலைத் திட்டத்தை ஆதரிப்பதாக தீர்மானம் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

## தேவதானம்.

30-1-33ல் தோழர் கே. மாரிப்பா அவர்கள் தலைமையின் கீழ் ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. எஸ். ஆறுமுகம் அவர்கள் சுயமரியாதை கீதம்பாடினார். பிறகு தோழர்கள் ஈ. எஸ். மணி ஏ. அந்தோணிமுத்து டி. எஸ். பாணி இவர்கள் சுகாதாரம் "மூடப்பழக்க வழக்கம்" 'மக்களுக்கு எது வேண்டும்' என்பது பற்றி முறையே பேசியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது

ஒரு நிருபர்


## விளம்பரம்.

### ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு முனிசிபல் மார்க்கெட்டுகளிலும், சிலாட்டர் ஹவுஸ்களிலும் 1933-34 வருஷத்தில் பீஸ் வசூல் செய்யும் பாத்தியதையையும், இதர கன்ட்ராக்ட்களும் 6-3-1933-தேதி காலை 8-30-மணிக்கு ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஹாலில் ஏலத்தில் விடப்படும். மற்றவிபரங்கள் ஆபீசில் தெரிந்து கொள்ளலாம்.

கே. ஏ. ஷேக் தாவுத்,
சேர்மன்.

## விளம்பரம்.

### ஈரோடு முனிசிபாலிட்டி.

ஈரோடு டவுன் லார்டுநேப்பியர்வீதியில் முனிசிபல் கடைகளுக்கு மேல்கட்டியிருக்கும் கட்டிடத்தை 12-3-1933-முதல் 10-6-1935-வரை வாடகைக்கு 6-3-1933 தேதி காலை 8-30மணிக்கு ஈரோடு முனிசிபல் கவுன்சில் ஹாலில் ஏலத்தில் விடப்படும்.

கே. ஏ. ஷேக் தாவுத்,
சேர்மன்.

### மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

(1916 ஷு ஸ்தாபிக்கப் பட்டது.)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும், பூட்டவும்கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்த பின் கவர்மெண்ட் லைசன்சும், பாடசாலை சர்டிபிகேட்டும், கொடுக்கப் படும். மோட்டார் மெக்கானிக் தமிழ் புத்தகம் 50 படம் 200 பக்கம் விலை ரூ. 2—0—0. விபரத்துக்கு எழுதவும்.

தென் இந்தியா மோட்டார்
இஞ்சினீரிங் ஒர்க்ஸ் & பாடசாலை,
மயிலாப்பூர் P. O. சென்னை.

## 5-ரூபாயில் 5-கடிகாரங்களும், இதர சாமான்களும்.



யாவரும் வாங்கக்கூடியவை. 3-பேன்சிட்டைபல் ரிஸ்ட் வாட்சஸ் ரோல்ட் கோல்ட் பிளேட்டட், உருக்கின தங்கத்தைக் காட்டிலும் பிரகாசமுள்ளது. கோல்ட் குல்டு பேனுடன் டியூரேஷன் ஆப்கலர் 5 வருஷம் உத்திரவாதம். வடிவத்திலும், அழகிலும் இணையற்றது. கடிகார ரிப்பேர்காரர்களும் குற்றம் சொல்ல முடியாதது. எவ்வளவு நாள் ஓடினாலும் ஒரு நிமிஷங்கூட வித்தியாசப்படாத பர்மா டைம்பீஸ் 1, 10 வருஷம் உத்திரவாதம் கல்லின்மேல் போட்டாலும் உடையாத பலமுள்ள ஸார் புரூப் லீவர் பாகெட் கெடியாரம் 8-வருஷ உத்திரவாதத்துடன் 1-ம், பேட்டரியுடன் கூடிய டார்ச்லைட் ஒன்றும், 14 C. தங்க நிப் சுவராஜ் பவுண்டன் பெனு 1-ம், இவையெல்லாம் 5-ரூபாய்க்குக் கொடுக்கப்படும். பாகிங் தபால் செலவு வேறு.

குறிப்பு:—கம்பெனியார் உத்திரவாத காலத்தில் இனமாய் ரிப்பேர் செய்து கொடுக்கவும், இஷ்டமில்லாவிட்டால் விலை கொடுத்து திருப்பிப் பெற்றுக்கொள்வார்கள்.

விலாசம்,
**Sharma Bros, & Co.,**
P. Box 2412. Sectiai 16, CALCUTTA.

இனம்! ஆச்சரியம்!! இனம்!!!

## "காயகல்பம்"

கண்டதுமில்லை. கேட்டதுமில்லை

24-மணி நேரத்தில் குணமில்லாவிடில் ரூபாய் வாபீஸ் செய்கிறோம். வெட்டை ஸ்திரீகளின் சம்பந்தத்தில் நேரிடும் வெள்ளைக்கு கை கண்ட மருந்து.

### முழுதும் கவனியுங்கள்.

கிழவர்களைக் குமாரனாக்கும் என்பதற்கு ஏதாவது சந்தேகமுண்டா? இதை உபயோகித்த பிறகு சுகமில்லை என்று சொல்ல மனிதருண்டா? வீசை வீசையாய் சாப்பிட்ட லேகியங்களெல்லாம் இதற்கு இணையாகுமா? (ஸ்திரீகளைக்கண்ட மாத்திரத்தில் வெட்கி தலைகுனியக்கூடிய ஸ்திதியிலுள்ளவர்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இதை காலை மாலை சாப்பிட்டுக்கொண்டுவர வெள்ளை தேகமெல்லாம் சதா அனல், கைகால் ஓச்சல், சிதபேதி, ரத்தபேதி, ரத்த மூலம், நீர் எரிச்சல், ஆசனக்கடுப்பு, அதிக உஷ்ணத்தினால் நித்திரை இல்லாமை, ரத்தக்கொதிப்பு, மூளைக்கொதிப்பு, உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், சொட்டு மூத்திரம், நாசியில் ரத்தம் வருதல், எலும்புருக்கி, அஸ்தி வெட்டை, கை கால் ஓச்சல், மயக்கம், சோம்பல் கண் எரிச்சல், உஷ்ணத்தில் தலை மயிர் உதிருதல், சொரி, கணச்சூடு, சிரங்கு, கெர்ப்ப வெட்டை, மலச்சிக்கல், உஷ்ணத்தினால் உண்டான வியாதியெல்லாம் போய் தேகத்தை தங்கமயமாக்கும். இந்தியாவில் 100-க்கு 95-பேர் உஷ்ண சரீரமாகவே இருக்கிறார்கள். தேகத்திலுள்ள உஷ்ணங்களை கண்டிஎது சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி தேகத்தை தங்கமயமாக்கும்.

40-நாள் மருந்து ரூ. **2-4-0**. 20-நாள் மருந்து ரூ. **1-4-0**.
(மாதிரிக்காக)

வி. பி. சார்ஜ் பிரத்யேகம். உடனே எழுதுங்கள்,

விலாசம்:— ஸ்ரீ தணிகை முருகன் ஆஸ்ரமம்,
8-வது பீட், வேப்பேரி போஸ்ட், மதராஸ்.

## நாகர்கோவில்.

### சுயமரியாதை இளைஞர் சங்கம்.

இச்சங்கத்தின் ஐந்தாவது பொதுக்கூட்டம் வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு கோட்டாறு சுயமரியாதை வாசிப்புச் சாலைக்கு சமீபத்தில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் ஆர். மாடசாமி அவர்கள் தலைமை வகித்தார். தோழர்களான வள்ளியம்மாள்' ராமலக்ஷிமி, பாஞ்சாலி, கே. சிவராம கிருஷ்ணன் ஆகியோர் தீண்டாமை, சகோதர ஒற்றுமை. இந்துமதம் என்ற பொருள்கள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். அதை ஆதரித்து தோழர்களான கே. ராமய்யா, எஸ். கிருஷ்ணன், ஈ. ராமசாமி, எ. ஈ. பெருமாள் முதலியவர்கள் பேசினுர்கள் என காரியதரிசி எழுதுகிறுர்.

## ஆம்பூர்

### சுயமரியாதைத் திருமணம்.

28-1-33-ல் ஆம்பூரில் ஆதிமூலம் இல்லத்தில் தோழர் எ. வி. பெரியசாமி அவர்கள் தலைமையின்கீழ் தோழர் முனிசாமிக்கும், தோழர் சரவம்மாளுக்கும் யாதொரு மூடப்பழக்க வழக்கங்களில்லாமல் சுயமரியாதைத் திருமணம் நடை பெற்றது. அவ்வமயம் தோழர்களான ஆதிமூலம், பெருமாள், பெரியசாமி முதலியவர்கள் மக்கள் மனம் கலரும் வண்ணம் சொற்பொழி வாற்றினுர்கள். திருமணக் கூட்டம் மாலை 3மணிக்கு இனிது கலைந்தது. இத் திருமணம் ஆதிதிராவிட அபி விருத்தி சங்கத்தின் நன் முயற்சியால் நடந்தது குறிப்பிடத்தக்கது.

ஒரு நிருபர்

## திருநெல்வேலி.

### இந்திர குலவேளாள பல்லவ ஆந்திரர் சபை, ஜில்லா வாலிப ஐக்கிய சங்கம் 2வது மகாநாடு.

1933ம் ௵ பிப்ரவரி௴ 3, 4தேதிகளில் ஷை மகாநாடு பாளையங்கோட்டை நூற்றுண்டு மண்டபத்தில் நடைபெறுமென்றும், அதற்கு தோழர்களான மேஜர் எ. ஜி. எ. டன்னிங் துயைவர்கள், ரெவரெண்ட்செல்வின் துரையவர்கள், தேவதாஸ் வக்கீல்' ஜில்லாக்கலெக்ட்டரவர்கள் தலைவர்களாக இருப்பார்களென்றும், தங்கள் குலம் விஷயமாக ஷை மகாநாட்டில் யோசிக்கப்படுமென்றும், அதற்கு இந்திர குலாதிபர் அனைவரும் வரவேண்டுமென்றும், ஷை மகாநாட்டைப்பற்றி விபரமறிய கீழ்கண்ட விலாசத்திற்கு தெரிவித்துக்கொள்ளலாமென்றும் அறிவிக்கப்படுகிறது.

விலாசம்:—

ஞானப்பிரகாசம் சாமுவேல்.
A. D. ஸ்கூல் பிராஞ்சேரி,
கெங்கை கொண்டான் போஸ்டு
திருநெல்வேலி.

## வாலிப சகவாச சங்கம், திருச்செங்கோடு.

29-1-33ௗ மாலை 4மணிக்கு சங்க கட்டிடத்தில் வாராந்திரக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் ருத்ரம் அவர்கள் தலைமை வகித்தார். அவ்வமயம் தோழர்கள் டி. எ சங்கரலிங்கம், டி. எ. கைலாசம், நல்லையா, பெருமாள் முதலாயினோர் "பொதுவுடமை" என்னும்பொருள்பற்றி நீண்டநேர சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். பின்னர் தலைவர் முடிவுரையுடன் வந்தனோபசாரத்துடனும் கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது கலைந்தது என காரியதரிசி தெரிவிக்கிறுர்.

## பாலையம்பட்டி.

பாலசுப்பிரமணிய பிரதமவித்தியாசாலையின் ஸ்தாபகர் ஜுபகார்த்த தினக்கொண்டாட்டம் 27-1-33ல் தூத்துக்குடி தோழர் கூ. கா. ஆ. பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பல பிரபல ஸ்தர்கள் விஜயம் செய்திருந்தார்கள் வந்திருந்தவர்களில் முக்கியமான தோழர்கள்:— ஷை யூனியன் பஞ்சாயத்து போர்டு வைஸ் பிரசிடெண்ட் அழகப்பன் செட்டியார் அவர்கள், கருப்பையா பிள்ளை அவர்கள், கோபாலபுரம் இந்து எலிமெண்டரிஸ்கூல் மானேஜர் ராமசாமி ரெட்டியார் அவர்கள், அம்பலம் வீரகுமாறு நாடார் அவர்கள், மா. சு. சிதம்பர நாடார் அவர்கள், வே. சிவித்தால் பெரியவ நாடார் அவர்கள் மதுரை ந. சு. கந்தசாமி நாடார் அவர்கள் ஷையூர் வி. கே. கருப்பண நாடார் அவர்கள், மா. சு. சி. கிருஷ்ணசாமி நாடார் அவர்கள், சு. ப. சு. பழனிச்சாமி நாடார் அவர்கள், சி. கிருஷ்ணசாமி நாடார் அவர்கள், கைலாச நாடார் அவர்கள், பண்டார நாடார் அவர்கள் நராயண நாடார் அவர்கள் முதலியவர்களாவார்கள். பின் தலைவர் வித்தியாசாலையின் அவசியத்தைப்பற்றியும், கல்வியின் வசியத்தைப் பற்றியும், பேசியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

## சென்னை.

### சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் சார்பாக 28-1-33ல் வாசமேடு கார்ப்பரேஷன்பள்ளிக்கூடத்தில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் எல். ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் எஸ். குருசாமி, எஸ். வி. லிங்கம் ஆகியவர்கள் "சுயமரியாதையும்", தாழ்த்தப்பட்டாரும் என்பது பற்றி பேசினுர்கள். தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

### மற்றொரு கூட்டம்.

ஷை சங்கத்தின் வாராந்திரக்கூட்டம் 29-1-33ல் நடைபெற்றது, தோழர் எல். லூயிஸ் அவர்கள் தலைமவகித்தார். அதுசமயம் தோழர்கள் கே. எஸ் நாதன், பி. சந்திரசேகரன் எஸ். ரங்கநாதன், கே. கிருஷ்ணசாமி எல். தங்கராஜ், டி.ராதகிருஷ்ணன், பி. எஸ். சம்மந்தம் ஆகியோர் சுயமரியாதையும், மனித முன்னேற்றமும் என்பது பற்றிப்பேசினுர்கள். பின் 27, 28-12-33ல் ஈரோட்டில்நடந்தவேலை திட்டக்கூட்டததில் நிறைவேறிய தீர்மானங்களை இச்சங்கம்முழுமனதுடன் ஏற்றுக்கொள்கிறதென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியதென ஒரு நிருபர் எழுதுகிறுர்.

## ஆலங்குடி.

27-1-33ந்தேதி மாலை கூத்தனூர் தோழர் எஸ். எஸ். லெட்சுமணன் அவர்கள் தலைமையில் தோழர்கள் அ. பொன்னம்பலனுர், ப. ஜீவானந்தம், சுப்பையா, விசாலாக்ஷி ஆகியவர்கள் சமதர்மம், பெண்கல்வி, மூடப்பழக்க வழக்கங்கள் என்னும் விஷயமாகப் பேசினுர்கள் பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது

ஒரு நிருபர்.

## ஸ்ரீவில்லிப்புத்தூர்.

### அறிவு வளர்ச்சி சங்கம்:—

ஷை சங்கத்தின் கூட்டம் 24-1-33ல் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தோழர் எ. தெய்வநாயகம். அவர்கள் தலைமையில் நடைபெற்றது பலதோழர்கள் கூடிஇருந்தார்கள். தோழர்கள் பலர் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிப்பேசியபின் கூட்டம் கலைந்தது

ஒரு நிருபர்.


**ஈ. வெ. ராமசாமியின்**

**இலங்கை**

**சொற்பொழிவு.**

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100- புத்தகம்ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினுல் 100-புத்தகம் தபால் சிலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.




கோவை சுயமரியாதை சங்கத்தலைவரும், ஷை ஜில்லாவில் சுயமரியாதைப் பிரசாரம் செய்து வருபவருமான
**தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள்.**

## காஞ்சீபுரம்.

### காமாட்சி அம்மன் கோவில் அம்மன் திருமங்கிலியம் திருட்டு

3-11-32ந்தேதி அம்மன் பேரிலுள்ள திருமங்கல்லிய முதலுள்ள நகைகள் களவு போய்விட்டதாகத் தெரிகின்றது. ஒரு நிருபர்

## அருப்புக்கோட்டை.

### புதிய டீம்ஸ்தாபனம்.

இந்நகரில் ஜெயவீர ராஜிங்டவுன் டீம் என்ற விலாசம் வைத்து 1933 ௵ ஜனவரி௴ முதல் தேதிமுதல் நடந்து வருகிறது. அதில் காலை மாலை நேரங்களில் தினசரி பந்து விளையாட்டு 20 பேர்வரை விளையாடுகிறுர்கள் என ஒரு நிருபர் எழுதுகிறுர்.

## நான்கு மணமகன் தேவை.

(1) 17 வயதினையுடைய சைவ வேளாளர் வகுப்பில் பிறந்த 5 வது வகுப்பு வரை படித்த மாணிற முடைய பெண் ஒன்று மறு மணம் செய்து கொள்ள விரும்புகிறது.

மேற்படி பெண்ணிற்கு சைவ வேளாளர், சைவ செட்டியார், சைவ முதலியார் வகுப்புகளில் பிறந்தவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும். மணமகன்:—25 வயதிற்கு மேற்படாதவரும், சம்பாத்தியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

(2) 18 வயதினையுடைய அகம்படிய வேளாளர் வகுப்பில் பிறந்து 6-வது வகுப்பு (II பாரம்) பாஸ் (பிரைவேட்டாக ஆங்கிலம் கற்று வருகிறது) சங்கீதத்தில் தேர்ச்சியடைந்த அழகு மிக்க பெண் ஒன்றுக்கு மணமகன் தேவை.

மணமகன்:—25 வயதிற்கு மேற்படாதவரும், பி. எ. படித்து உத்தியோகத்தி லிருப்பவரும் அல்லது வியாபாரத்தில் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஐம்பதுக்கு மேல் சம்பாத்தியம் செய்து கொண்டிருப்பவரும், அகம்படிய வேளாளர், சோழிய வேளாளர், சைவ வேளாளர், முதலிய வகுப்புகளில் பிறந்தவர்கள் மட்டும் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

(3) 16 வயதினையுடைய 6 வது வகுப்பு பாஸ் செய்த கத்தோலிக்க கிறிஸ்தவமரபில் தோன்றிய நற்குணமுடைய பெண் ஒன்றுக்கு மணமகன் தேவை.

மணமகன்:—1வது (எஸ். எஸ். எல். சி.) வகுப்பு பாஸ் செய்தவரும். 25 வயதினையுடையவரும் மாதம் ரூபாய் ஐம்பதுக்கு மேல் உத்தியோகத்தில் சம்பாதிக்கக் கூடியவரும் இந்து கிறிஸ்தவ மதங்களில் தோன்றியவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) 16 வயதினையுடைய 9 வது வகுப்பு படித்துக் கொண்டிருக்கிற நாயுடு வகுப்பில் தோன்றிய பெண் ஒன்றுக்கு மணமகன் தேவை.

மணமகன்:—நாயுடு, வேளாளர் முதலியார், நாட்டுக்கோட்டை செட்டியார் ஆகிய வகுப்புகளில் தோன்றியவராகவும், பி. எ. பாஸ் செய்தவராகவும், உத்தியோகத்திலிருப்பவராகவும், 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மணங்கள் பூரண சுயமரியாதை முறையில் நடைபெறும்.

மேலே கண்ட நான்கு விளம்பரங்களுக்கு விண்ணப்பங்கள் அனுப்பக் கூடியவர்கள் தங்கள் தங்கள் நிலைமையை பூரணமாய் விளக்க எழுதி அனுப்புவதுடன் இதுக்கு 0-1-3 ஸ்டாம்புகள் அனுப்ப வேண்டும். கடிதங்கள் ரகசியமாக வைத்து வேண்டுவன செய்யப்படும்.

ச. ம. சி. பரமசிவம்.
காரியதரிசி, தமிழ் நாடு
புரோகிதமறுப்புச் சங்கம்,
22, [illegible] உறையூர், திருச்சி.


உங்கள்.

**கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்**

**பூவிழுந்தால்!!**

கண்ணில் பூவிழுந்து பார்வை மறைத்திருப்பதை அபரேஷன் இல்லாமல் சுகப்படுத்துகிறோம் [illegible] திரும்பி [illegible] நாட்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

**செவிடு!!**

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால், கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. [illegible] நிவர்த்திக்கப்படும். [illegible] உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் [illegible]

"Sri" Works

[illegible] St. [illegible] Calcutta.

## டாக்டர் சிங்காரம் அவர்களின் கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செமேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆறாத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0
20 „ „ 4—0—0

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்.
மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.
முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

புருஷர்களுக்கு அசக்தியை போக்கடித்து புருஷத்துவம் தாதுபுஷ்டி ஜீரணசக்தி முதலியவைகளைக் கொடுக்கும் டானிக்.

## மன்மத குளிகை

அனேகக்காரணங்களாலும் இழந்தபலம், தாது நஷ்டம் போகசக்திக்குறைவு, மன உற்சாகம், இவைகளை திரும்பக் கொடுத்து இல்லற ஒற்றுமை வீரியவிர்த்தி முதலியவை களைக் கொடுப்பதில் இணையற்றது. 20 குளிகை ரூ. 2—0—0 60 குளிகை ரூ. 5—0—0.

மணியப்பசாமி வைத்தியசாலை, பழனி.

## அமுத ரத்னாகரம்.

(சிறந்த தாது புஷ்டி லேகியம்)

ஐம்பொறிகளுக்கும் நல்ல பலுவைக் கொடுத்து, உயிருக்கு சிறந்த சக்தியைப் பெருக்கி, ஆயுளை வளர்க்கும் 40 நாள் சாப்பிட்டபின் உடலின் நிறை அதிகப்படா விட்டால் பணம் வாபஸ் தருகிறோம்.

40 நாளுக்கு ரூ. 4. 20 நாளுக்கு ரூ. 2—4—0.

## இன்பமணி.

சுபும்சகம், தாது நஷ்டம், நரம்பு தளர்ச்சி முதலியவைகளை நீக்கி, பூரண இன்பசுகம், வாலிபத்தன்மை, திட காத்திரம் ஆகிய வைகளை அளிப்பதில் இதற்கிணையானவை வேறொன்றும் கிடையாது.

30 மாத்திரை ரூ. 5—0—0.

## ஜீரணதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

உண்ட உணவைச் செரிக்கச் செய்து தினந்தோறும் மலத்தைக்கழிக்கும். மலச்சிக்கலினால் உண்டாகும் நோய்கள் எதுவாக இருந்தாலும் தவறுமல் குணமாக்கும். பசியின்மை, நெஞ்செரிவு, புளியேப்பம், வயிற்றுவலி, குன்மம், வாந்தி, அஜீரணம், தூக்கமின்மை, அசதி ஆகிய நோய்களையும் கண்டிப்பாய் நீக்கும். விலை ரூ. 2.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது. சகல வியாதிகளுக்கும் உத்தரவாதமும், குணமுமுள்ள மருந்துகளிருக்கிறது. விபரத்திற்கு எழுதுங்கள். மலாய் நாட்டு வாசிகள் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும். கேடலாக் இனாம்.

ஏஜண்ட், அருணகிரி அண் கோ., போ. பெட்டி 212, நெ. 49 லிங்க செட்டி தெரு, சென்னை.

5 [illegible]

இருந்த போதிலும் [illegible] கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது.

### தனிவகுப்புகளில்.

இவை பொது நிலைமையாகும். இனி சில தனி வகுப்புகளில் உள்ள பெண்கள் நிலைமையைப் பற்றி சில குறிப்பிடுகின்றேன். சில வகுப்புகளில் பெண்கள், ஆண்களின் கண்களுக்கே தென்படக்கூடாது. உடம்பு, தலை முகம் ஆகிய எல்லாவற்றையும் ஒரு துணியினுல் போர்த்து மூடிக் கொள்ள வேண்டும். கண் மாத்திரம் தெரியும்படி ஓட்டை விட்டு பார்த்துக் கொண்டே போக வேண்டும். பெண்கள் தனியே எங்கும் போகக்கூடாது. சிறு பெண்ணை, அதாவது 8, 10, 12 வயதுபெண்ணை 20, 30, 40, வயதுக்காரர்களுக்கு கட்டிக் கொடுத்தாலும் கல்யாணம் ஆன அன்று இரவே படுக்கை வீட்டில் பெண்ணையும் ஆணையும் தனியாய் படுக்க வைத்து விடுவார்கள். அவன் அதை காமாகாரமாய் எப்படி மிருகத்தனமாய் வேண்டுமானலும் சிலசமயங்களில நடத்துவான்.

சில வகுப்புகளில், மகனுக்கு கல்யாணம் செய்த பெண் மாமனுக்கும் பெண்ஜாதியாய்இருக்கவேண்டும், 10 வயது பையனுக்கு 20வயது பெண்ணை கல்யாணம் செய்து பையன் 18 வயது நிரம்புவதற்குள் பெண்ணுக்கு 2, 3 குழந்தைகள் பிறந்து விடும். அது மாமனுக்கோ அல்லது புருஷனுடைய அண்ணனுக்கோ பிறந்ததாக இருந்தாலும் அக்குழந்தைகள் சட்டப்படி பிறந்த லெஜிடிமேட் குழந்தைகளாகவே பாவிக்கப்படும்.

சில வகுப்புகளில் குடும்பத் தலைவன் மாத்திரம் ஒரு பெண்ணை கல்யாணம் செய்து கொண்டு அவனுடைய சகோதரர்கள் உள்பட யெல்லாருமே அப்பெண்ணை பெண் ஜாதியாய் அனுபவிப்பது உண்டு.

சில வகுப்புகளில் ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம் தான் கலியாணம் செய்து கொள்ளலாம். மற்ற இளைய சகோதரர்கள் வேறு ஜாதி பெண்களை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டிருப்பது வழக்கம். இப்படி வைப்பாட்டியாக வைத்துக் கொண்ட பெண்களுக்கு குழந்தைகள் பிறந்தால், அவற்றை தகப்பன் காப்பாற்ற வேண்டும் என்கின்ற நிபந்தனை இல்லை. தகப்பன் சொத்தில் அவைகளுக்கு பங்கும் இல்லை.

சில வகுப்புகளில் உயர்ந்த ஜாதிக்காரன் என்கின்ற பிராமணன் மற்றவகுப்புப் பெண்களைக் கூப்பிட்டால் அவனுக்கு அவள் இணங்கியே ஆக வேண்டும்.

பிராமணன், ஒரு பெண்ணினுடைய புருஷனைக் கூப்பிட்டே அவனுடைய பெண் ஜாதி மீது தனக்கு ஆசையாய் இருப்பதாகவும், அவளை அழைத்து வரும் படியும் கேட்டால் புருஷன் உடனே அழைத்துக் கொண்டு போக வேண்டும். [illegible] சம்மதிக்கா விட்டால் [illegible] படுக்கி, அல்லது கொடுமை [illegible] சம்மதிக்கச் செய்வதுமுண்டு. சில வகுப்புகளில் குரு கூப்பிட்டால் இணங்கியே ஆகவேண்டும். முன் குறிப்பிட்ட, அதாவது ஒரு குடும்பத்தில் மூத்தவன் மாத்திரம் கல்யாணம் செய்து கொள்ளலாம் மற்றவன் வேறு வகுப்பில் வைப்பாட்டி வைத்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்ட வகுப்பில் பெண்கள் மீது ஆகி அனேக பெண்கள் சாகும் வரை கல்யாணம் இல்லாமல் கன்னிப் பெண்ணாகவே இருந்து சாகும் வழக்கம். இப்படிப்பட்ட பெண்களுக்கு அவர்கள் செத்த பிறகு பிணத்திற்கு ஒருவனைக் கொண்டு தாலிகட்டச் செய்து பிறகு நெருப்பில் வைத்துக் கொளுத்தி விடுவது வழக்கம்.

சில வகுப்புகளில் கடவுளுக்கு பெண்ஜாதி ஆகிறது என்று கோவிலில் வைத்து கடவுளை கல்யாணம் செய்து கொண்டதாக ஏற்பாடு செய்து பொது விபசாரியாய் வாழச் செய்வது உண்டு இவர்களுக்குப்பெயர் தேவதாசி

ஒரு கல்யாணமான பெண்ணுடன் மற்றொரு ஆண் சம்பந்தம் வைத்துக் கொண்டதாகத் தெரிந்தால் அந்த ஆண் சட்டப்படி தண்டனைக்குள்ளாவான். பெண்ணை ஜாதியை விட்டு தள்ளி வைத்துவிடுவதுமுண்டு

ஒரு பெண் விபசாரியாய் ஆகிவிட்டால், அல்லது தேவதாசியாக இருந்தால் சொத்து வைத்துக் கொண்டு சுதந்திரமாய் இருக்கலாம், இல்லாவிட்டால் சொத்து உரிமை இல்லை, சுதந்திரமும் இல்லை.

இந்த விதவைகள் நிலைமையைப் பற்றியும், அவர்கள் சம்பந்தமான சட்டங்களைப் பற்றியும் விபரமாய் மற்றொருசமயம் நேரிடும்போது பேசுகிறேன்.

---

[4 - பக்கத் தொடர்ச்சி]

இருக்கின்ற [illegible] அவ்விதத்திட்டமும் [illegible], என் மீளாத நரகமும் [illegible] அவ்விதப் பெண்கள் [illegible] பாவங்களை [illegible] (பாதிரியிடம்) [illegible] பாவ மன்னிப்பு [illegible] ஆண்டவர் [illegible] கடவுள் [illegible] வேறு எந்த மனிதனும் [illegible] யோக்கியதை புடையவர் அல்ல; அவர் ஒருவரே அவற்றைக் கேட்டு [illegible] அறையப்பட்ட போது தனது மகனுகிய யேசு கிறிஸ்துவின் இரத்தப் பெருக்கைக் கொண்டு சுத்தம் செய்ய அருகதை புடையவர் ஆவர், [illegible] அவர்கள் சுபாவமாக உணர [illegible].

ஆனுல் [illegible] பயானது எத்தனை [illegible] ஆத்மாக்களை [illegible] பழக்க வழக்கங்களாகி [illegible] பாதிரிகளிடம் [illegible] அவ்வளமாறு வைத்திருக்கின்றனென்பதைப்பாருங்கள். அவர்களெல்லோரும், சகல வேத நூல்களிலும், எல்லா ஜெப மேடைகளிலும் பாவ சங்கீர்த்தனத்தை செப்புக [illegible] Confessor [illegible] மாதக்கடைசி [illegible] அவர்களுடைய பாவமும் [illegible] மன்னிக்கப்படுகின்றது என்று [illegible] அவர்கள் [illegible] பெறமுடியாது என்பதாகவும் வெளியிடப்பட்டுவருகின்றார்கள். ஆனுல் கடவுளால் தேவ மனிதருக்கு இயற்கையாக அளிக்கப்பட்ட சுயமரியாதையையும் மேலான தன்மையையும் மீறி அதற்கு மாறுபட்ட [illegible] செய்வதற்கு மனச்சாட்சி இடங்கொடாதிருப்பினும் [illegible] பாவமன்னிப்பின் நிமித்தம் [illegible] கடுங்கி பொறுக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். [illegible] சொல்லக்கூடாத வார்த்தைகளை ஒருதனிப்பட்ட ஆண் (பாதிரி) [illegible] கூற நேரிடுவதானது அப்பெண் மணிகளுக்கு [illegible] கொடுப்பதாகும்.

மேலான குணங்களை புடைய அநேக பெண்கள், பாவ மன்னிப்பின் நிமித்தம் ஒரு பாதிரியின் முன்னுல், வாய் விட்டுச் சொல்லத் தகாத எண்ணங்களை வெளியிடுவதற்காக, தங்களிடத்தில் இயற்கையாக அமைந்த சுயமரியாதை புணர்ச்சியைத் தள்ளக வேண்டியிருக்கு மோ அபராதத்தை மன்னிக்கும் கடவுளிடம் தனித்து மன்றாடும் பிரார்த்தனைப் பின்னர் பாபசங்கீர்த்தனை [illegible] செல்ல [illegible] படுகின்றார்கள். (தொடரும்)

---

## செங்குந்த மகாநாடு

தென்னிந்திய செங்குந்தர் [illegible] மகாநாடு தஞ்சை ஜில்லாவில் நடைபெறும் விஷயமாய் வரவேற்பு சபை அமைப்பதற்காக 6-2-33ந் தேதி திருவாரூர் [illegible] சித்திவிநாயகராலயத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற மெனஷிசங்கக் காரியதரிசி தி. நா. சபாபதி முதலியார் எழுதுகிருர்.

## சின்னமணி.

அனுப்பப்பட்டி தோழர் பி. ஆர். சின்ன கிருஷ்ணசாமி அவர்கள் 20-1-33ல் பிறந்த தமது ஆண் குழந்தைக்கு "சின்ன மணி" எனப் பெயரிட்டிருக்கிறுரென ஒரு நிருபர் எழுதுகிருர்.

---

"[illegible]"

தனிப்பிரதி விலை அரையணு

ஏஜண்டுகளுக்கு

மேல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சி கட்டுரைகளும், சமூக சமுதாய அரசியல் செய்திகளுடனும் அச்சமற்ற [illegible] அபிப்பிராயங்களை [illegible] கொண்டு கிரவுன் 1-க்கு 2 சைஸ் [illegible] படங்கள் போட்டு 12 பக்கம். [illegible] பிரதி ஞாயிறு தோறும் மதுரையிலிருந்து வெளியிடும் "வெடி குண்டு" என்னும் தமிழ் வாரப்பத்திரிக்கைக்கு எல்லா விடங்களிலும் விற்பதற்கு ஏஜண்டுகள் தேவை. தனிப்பிரதி விலை அரையணு. பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசா கமிஷன் கொடுக்கப்படும்; எத்தனை பிரதிகள் தேவையோ அத்தனை பிரதிகளின் நான்கு வாரத்திய தொகையை முன் பணமாக அனுப்பபடாத ஏஜண்டுகளை பதிவு செய்து கொள்ளப்படமாட்டா. முன் பணம் வருடசந்தா ரூ இரண்டு. ஆறு மாதத்திற்கு ஒன்றேகால். வெளிநாடு வருஷசந்தா மூன்று.

A. S. ஆனந்தம்
மானேஜிங் எடிட்டர்
காரியாலயம் தெற்கு வாசல்
மதுரை.

---

## நோட்டீஸ்.

1933-34 வருஷத்தில் கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தாருக்குப் பாத்தியப்பட்ட மார்க்கட்டுகள், வண்டிப்பேட்டை முதலியவைகளின் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதையும், குப்பை, கக்கூசு, சாருவு டிப்போக்களிலிருந்து எருவுகளை எடுத்துக்கொள்ளும் சுதந்திரத்தையும், 1933 வருஷம் பிப்ரவரி மாதம் 20 தேதி திங்கட்கிழமை காலை 8-30 மணிக்கு கோயமுத்தூர் முனிசிபல் ஆபீசில் முனிசிபல் சங்கத்தாரால் ஏலம் போடப்படும்.

சி. எஸ். ரத்தினசபாபதி,
சேர்மென்.

முனிசிபல் ஆபீஸ்,
கோயமுத்தூர்,
24-1-1933.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமராஜ்ய மென்றும், தர்ம ராஜ்ய மென்றும் பிதற்றுவதில் யாது பிரயோஜன மெனவும் கேட்கின்றோம்?

நமது ஆசிரியர், நாஸ்திகத்தால் நமது நாடு அடிமைத் தனத்தினின்று விலகமுடியாதென்று உரைக்கின்றார். கடந்தபலஆயிரம் வருஷங்களாக ஆஸ்திகம்நிறைந்திருந்ததா? அல்லது நாஸ்திகம் நிறைந்திருந்ததா? கோயில்குளங்களும், ஜாதி ஆசாரங்களும் எந்தகாலத்தில் தழைத்தோங்கியது எனவும் கேட்கின்றோம்? கி. மு. 1000 முதல் 1800 வரை புராண காலமென்று சரித்திரக்காரர்கள் காலம்வரையிட்டிருப்பதை நமது ஆக்கியோன் அறிந்திரார் போலும். இந்த புராண காலத்தில்தான் இந்தியநாடு மேற்றரசர்களுக்கு அடிமைப்பட்டு வந்திருக்க நாஸ்திகத்தால் அடிமைத்தனம் ஒழியாதென்பது என்ன தெரியாமை? நாஸ்திகம், அதாவது நிரிஸ்வரதம் நிறைந்த காலம், கபிலர் காலமென்பார், புத்தர் காலமென்பார், சாங்கியமும் புத்தமும் சுமார் ஆயிரம் ஆயிரத்தைநூறு வருஷம் நமது இந்திய நாட்டில் தழைத்து வந்தது. அந்தகாலந்தான் சிறந்த காலமென்பார். கல்வியும், அறிவும், சிற்ப நூலும், வான நூலும், வைத்திய நூலும், கணித நூலும், தத்துவ ஞானமும், விளங்கி வந்த காலமென்பார். அதைத்தான் (The Augustan age) என்பர் அதைத்தான் சென்றுவிடென்பர். அதில்தான் பாமர மக்கள் உண்மை சுதந்திரம் பெற்றதென்பர். அதற்குப் பிந்திய புராணக் காலத்தை (The Dark age) இருளடைந்த காலமென்பர். சரித்திர ஆராய்ச்சி இவ்வாறு இருக்க, ஆஸ்திகத்தால் நமது அடிமைத்தன மொழியுமென்பதுஉண்மைக்குவிரோதமாகும்

தேச சுதந்திரங்கள் நாஸ்த்திக கோள்கையுடையவர்களால் தீவிரமாக பெறப்படுகிறதேயொழிய ஆஸ்த்திக வைதீகர்களால் அல்லவென அறிக. உலகமெல்லாம் நோக்கும் ரஷியாவை விடுதலை செய்தவர் யார்? நேற்று ஸ்பெயினை (Spain) விடுவித்தவர் யார்? 1796-ல் பிரான்சை (France) கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுவித்து சிறந்த சொற்களாகிய சுதந்தரம் (Liberte), சமத்துவம் (Egalite), சகோதரத்துவம் (Fraternite) முதலிய திவ்விய மொழிகளை உலகில்முதலில்விடுத்தவர்யார்? நாஸ்திகர்களா? ஆஸ்திகர்களா? என்று கேட்கின்றோம்? மதத்துவேஷத்தால் கடந்த ஆயிர வருஷங்களாக (Crusades) என்றும், (religious persecutions) என்றும், (witchcraft) என்றும் (Heresy) என்றும் கொடானகோடி மபரை கொன்றும், கொளுத்தியும் நாசமுறச்செய்து வந்தது ஆஸ்திகர்களா? நாஸ்திகர்களா? இன்றைய தினம் நமது நாடுமுழுமையும் இந்துக்களும், மகமதியர்களும் மண்டையை உடைத்துக்கொள்வது நாஸ்திகர்களாலா? அல்லது ஆஸ்திகர்களாலா? இன்றைக்கும் பொதுஜன உண்மை விடுதலைக்கு நாஸ்திக சுயமரியாதையோர் பாடுபடுகின்றார்களா? அல்லது ஆஸ்திக காந்தியாரும் அவர் கோஷ்டியாராகிய காங்கிரஸ்காரர்களும் பாடுபடுகின்றார்களா? எனக்கேட்கின்றோம்? அத்தாட்சி வேண்டுமானால் "குடி அரசு" 1-1-1933 மலர் 36ல் 8, 9 பக்கங்களில் வரைந்துள்ள திட்டங்களை திருப்பித்திருப்பிப்படிக்கலாம். நாஸ்திகர் வீரத்தையும், வீர கர்ஜனையையும் நமது ஆக்கியோன் எட்டு வருஷமாக கேட்டதிலைபோலும்! தான் கேட்காமல் போனால், தான் கேட்க மனமில்லாமல் போனால், நாஸ்திகர்களை நோவுதலால் என்ன பிரயோசனம்? என்ன மதி? உலக தீவிர இயக்கங்களில் இன்றும் என்றும் முதன்மையாக நிற்போர் நாஸ்திகர் என்பதை நமது ஆக்கியோன் உணர்ந்திலர் போலும்! நமது மத்தியகால சரித்திர ஆராய்ச்சி செய்துளோர் யாவரும் (Dutt, weber Bandarker, Oldenbery, Garbe, [K]eith, Paranjepai ஆகும், புராணம் ஏற்பட்ட கால முதல் நமது நாட்டுக்கு வந்த கேடெனஉணர்த்துகிறார்கள். ஆனால் நாஸ்திகம் நிறைந்த காலமாகிய சாங்கிய புத்த காலங்களிலதான் நமதுநாடு சிறப்புற்றோங்கியதெனவும் தெரிவிக்கின்றார்கள். சர்வகலா சாலைகளாகிய (Universities) நலந்தா (Nalanda) வைசாலி (Vysali) டாக்ஸிலா (Taxila) தழைத்தோங்கிய காலமநாஸ்திககாலங்களே

எந்தக் காலத்தில் ஈஸ்வரனை நாஸ்தியாகக்கொண்டதோ அக் காலங்களிலெல்லாம் உலகம் (முக்கியமாக நமது இந்திய நாடு) கல்வி கேள்வியிலும், ஈகை, தயாளத்திலும், பரந்த நோக்கத்திலும், தானசீலத்திலும், பொருமையிலும் (Tolerance) சிறந்தோங்கி வளர்ந்துவந்தன அறிக.

"ஆஸ்திக விஞ்ஞான சாகரம் அல்லது "கடவுளும், பிரபஞ்சமும்" எனனும் தீர்வாத மறுப்பு"—

விலாசம்:— ஆக்கியோன்,

தோழர் பொ. சௌந்தரராஜம் பிள்ளை, விஜயபுரம் 1932.

## குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம. வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 1141[5]

Calcutta- (k)

## சுயமரியாதை சாவடி.

சுயமரியாதைச் சங்கம்

2-1.33ல் எஸ். ஆர். அத்தியப்பன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

தலைவர் அவர்களால் சுயமரியாதை இயக்க வேலைத் திட்டத்தைப் பற்றி கூறியபின் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

"தற் பொழுது பாடசாலைகளில் வைத்திருக்கும் பாடப்புத்தகங்கள் சிறுவர்களின் நுண்ணிய அறிவையும், கண்ணியம் வாய்ந்த உணர்ச்சியையும் கெடுத்து மூட நம்பிக்கை, அறியாமை என்ற துறையில் கொண்டு போய் விட்டு விடுவதால், தற்பொழுது ஈரோட்டில் ஏற்படுத்தியிருக்கும் பகுத்தறிவு நூர்பதிப்புக் கழகத்தார் உடனே அறிவுச்சுடர் கொளுத்தும் பாட புத்தகங்களை எழுதி எல்லா பாடசாலைகளிலும் பாடமாக வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்" என்பதாகும் (ஒரு நிருபர்.)

## வேந்தன் பட்டி.

சா. பொ. பெரியண்ண செட்டியார் மனைவி காலமான 16ம் நாள் சவண்டி என்னும் சடங்கு பிராமணீய மொழித்து செய்யப்பட்டது.

ஒரு நிருபர்

Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem

By Dr. Paranjpye M. A., D. Sc.

———)G(———

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and re uvenation must go through Dr. Paran pye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup Neatly bound.

Price per copy ... ... Rs 1—0 0

For Sub cribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot. Erode.

## இதுதானே தேவை!

இல்லற சுகத்தை அடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழ்ப்பெற்று வன்னிக்கையில்லா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்கவேணுமா!

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோகம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைகொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S I.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| 2. | சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| 3. | மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| 4. | ஆராய்ச்சி அணிகலம் ... | 0—12—0 |
| 5. | சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... | 0—4—0 |
| 6. | பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை | 0—6—C |
| 7. | மோட்டார்க்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... | 2—0—0 |
| | சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| | சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |

The crux of the Indian Problem
By Dr. P A R A N J P Y E (in English.)

விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் | ரூ. 4—0—0 |

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,**
ஈரோடு.


## Goshaye office pillss.
## கோஷாயி ஆபீஸ் மாத்திரை



Dr.T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

*Proprietor. T. K.* வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

### Read.
### *The 'Citizen'*

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.


### மதத்தை ஒழிப்பது உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.


## பண்டிட் ஆனந்தரின்,
### அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேக நோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

**மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,**
221, தங்கசாலை வீதி, சென்னை.

**ANANGARANGABATIKA**
*(Enjoyment Pill)*

DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

# குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்ப்பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமத்துவத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0.

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.